
# திருக்கோயில்

டிசம்பர் 1992 விலை ரூ 3



திருக்கழுக்குன்றம் இலட்ச தீப விழாவை ஒட்டி சங்கு தீர்த்த புஷ்கரமேளா தரிசனம் செய்கிறார் நம் ஆணையாளர்
திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ், அவர்கள். துணை ஆணையர் திரு தி. ஜெயராமன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் உடன் உள்ளார்கள்.

முகப்பு:

திருவிடைமருதூர்
அருள்மிகு மூகாம்பிகை தேவி முன் உள்ள
மகாமேரு சக்கரம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D

மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கீரச ஆண்டு மார்கழி
டிசம்பர் 1992 விலை ரூ. 3-00 | மணி: 12

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் உள்ளம்
— திருமந்திரச் செம்மல்
டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
— துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ்.

தித்தித்திருக்குமென் கற்பகமே
— எம். பரமேசுவரன் எம்.ஏ.

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

டஞ்சட்டி அருள்மிகு அகஸ்தீஸ்வரர் ஆலயம்
— டாக்டர் த. அமிர்தலிங்கம்

கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்.

பெருமைமிகு கந்தன்
— கோயிற்கலைச் செல்வர்
தி. இராசமாணிக்கம்

சித்திரபாரதம்
— செவ்வேள்

ஆடல்காணீரோ, திருவிளையாடல் காணீரோ.
— கம்பன் கவிநயமணி
வே. தியாகராஜன்

சங்கும், சங்காபிசேகமும்
— சிவநேசன்

மகேசுவர பூசை
— பேராசிரியை திருமதி சுமதி குமாரசுவாமி

பாவங்களில் கொடிய பாவம்-மது
— மாண்புமிகு தமிழக முதலவர்
டாக்டர் புரட்சித் தலைவி.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு




# அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச் செம்மல்

**டி. வி. வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்**

*திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்*



18

திருமந்திரம் ஓர் அருளாளரின் அனுபவக் களஞ்சியம். ஓர் ஒப்பற்ற ஞான நூல். யோக சாதனையை கோடிட்டுக் காண்பித்து ஞானத்திற்கான மார்க்கத்தையும் நமக்கு விளக்குகின்றது. திருமந்திரத்தில் யோகம் முக்கியமாகவே காணப்படுகிறது. யோகம் செய்வதற்கு நமது உடல் தேவைப்படுகிறது. இந்திரியங்களும் உட்கருவிகளும் யோகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே உடலைப் பற்றிய பல்வேறு கூறுகள், பகுதிகள், இவை இயங்கும் தன்மை என்ற செய்திகளெல்லாம் திருமந்திரத்தில் நிறையக் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் தற்கால விஞ்ஞான அறிவு பெறுவதற்காக நாம் பயன்படுத்தி வரும் கருவிகளை வைத்து மட்டுமே போதிய அனுபவத்தைப் பெற முடியாது. இந்த அனுபவத்தை நாம் பெற, நமக்கு நேரான வழிகளைக் காட்டிட, அதே போல அனுபவங்களைப் பெற்ற மெய்யுணர்வாளர்களின் அருளும் தேவைப்படுகின்றது. அதுவே இறையருளுமாகும். ஆகவே, எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மிக சாதனைக்கு இறையருள் இன்றியமையாததாக உள்ளது.

திருமந்திரம் அருள் அனுபவம் பெற்ற அனுபூதிமான்களின் நிலையைப் பல இடங்களில் விளக்குகின்றது. சில மந்திரங்களை மட்டும் இங்கே சுட்டிக் காண்பிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருமூலர் பரம்பொருளை தம்முள் உணர்ந்தவர். அதன் வரவாக இறைவன் திருவாக்கான சிவாகமத்தை எடுத்துரைக்கும் பேறு பெற்றவர். அண்டமெல்லாம் இறைவன் ஆற்றலால் இயங்குகின்றது. அதே இயக்கம் பிண்டத்திலும் நடைபெறுகிறது. பிண்டமென்றால் உடலாகிய தூலப் பொருள் மட்டுமல்ல. உடலின் பல கூறுகள் சூக்கும நிலையிலும் இருக்கின்றன. அந்த நிலையில்தான் பரம்பொருளின் பேரறிவும், பேராற்றலும் அனுபவிக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது. இந்த அனுபவம் ஓர் தொடர் அனுபவம். சூக்கும நிலைக்கு ஒரு அனுபவம், தூல நிலைக்கு ஒரு அனுபவம் என்பதல்ல, அருள் அனுபவம் உள்ளத்தின் உணர்வுகளை பல நிலைகளிலிருந்து தாக்குகிறது. இதுவே பரம்பொருளின் தரிசனமும் ஆகும். இந்த அனுபவத்திலே ஒன்றிப்போன உயிரானது கால வரம்பிற்கு அப்பால் சென்று விடுகிறது. இந்த நிலையில் திருவருள், ஞானம், ஆற்றல் எல்லாம் ஒன்றே.

திருமூலர் இந்த அனுபவத்தை இரண்டு மந்திரங்களால் எடுத்துக் கூறுகின்றார். தனது உணர்வுகள் பரம்பொருளின் இயக்கத்தோடு ஒன்றிப் போகும் போது, தான் என்கிற நினைவு இழந்து, காலத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனுபவங்கள் மறைந்து, நிலையான, ஒப்பற்ற இடத்தில் தான் பொருந்தியிருந்ததாகவும் திருமூலர் கூறுகிறார்.

''செப்புஞ் சிவாகமம் என்னும் அப்
பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே''.
(திருமந்திரம்.......74)

''இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே



இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''.

(திருமந்திரம்......80)

அருவமாகிய பரம்பொருள் மனித உடம்புக்குள் புகுந்து நிற்கின்றது. உடலையும், உடலைச் சார்ந்த கருவிகளையும், புலன்களையும் தத்துவங்களையும் உயிரோடு இணைத்து இயக்குகிறது. உடம்புக்கு உள்ளும் வெளியிலும் பரம்பொருளின் அருளாட்சி நடைபெறுகின்றது. மெய்ப்பொருளைத் தம்முள்ளேயே அனுபவிப்பதை சிறந்த யோக சாதனையாக திருமூலரைப் போன்ற சித்தர்கள் எடுத்துக்கூறுகின்றனர். இந்தச் சாதனையில் உயிரும் உடலும், உணர்வுகளும் பரம்பொருளின் பேரறிவுடனும், பேராற்றலுடனும், சுருதியும், லயமும்போல இணைந்து செயல்படுகின்றன. இந்தச் சேர்க்கையைப் பெறுவதே யோகத்தின் நோக்கமாகும். ''மூலனை நாடி'' என்கிறார் திருமூலர். திருவருளால் பஞ்சபூத இயக்கத்தைப் பற்றிய அறிவினைத் திருமூலர் பெறுகிறார். அந்த அறிவாகவும் மாறுகிறார். ''சதாசிவனாயினேன்''. இந்த அறிவின் சேர்க்கையால் மெய்ஞானம் கிட்டுகிறது. இந்த மெய்ஞ்ஞானம் பெற்ற திருமூலர் சிவசொரூப தரிசனம் கிடைக்கப் பெற்று, சத்திய ஞானானந்தத்தில் நிலைத்து நிற்கிறார். இந்த உணர்வுகள் எல்லாமே ஞானியின் உள்ளத்தில் ஏற்படக்கூடிய உணர்வுகளே.

''நந்திஅரு ளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அரு ளாலே சதாசிவ னாயினேன்
நந்திஅரு ளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்.
நந்திஅரு ளாலே நானிருந் தேனே''.

(திருமந்திரம்...92)

உடலின் பொறிகளும், புலன்களும் செயற்படும்பொழுது நமக்குக் கிடைக்கக்கூடிய அனுபவங்கள் உண்மையில் நம் உள்ளேதான் உருவம் பெறுகின்றன. இந்தக் கருவிகளின் செயல்களைக்கட்டுப்படுத்தும்பொழுது நம்முள்ளேயே வேறுசில அனுபவங்களும் தோன்றும். நமது ''பார்வை''யை உள்ளே திருப்பும்பொழுது இந்த அனுபவங்கள் கிடைக்கின்றன. பரம்பொருளை ஞானிகள் 'ஒளியாகவும்' ''ஒலியாகவும்'' காண்கிறார்கள். பொறிகளைப் பயன்படுத்தி அனுபவிக்கும் ஒளியும் ஒலியும் ஒருவிதம் பொறிகளைக் கட்டுப்படுத்தி, அவற்றைச் செயலிழக்கச் செய்து அனுபவிக்கும் ஒளியும் ஒலியும் வேறுவிதம். புறத்தே உள்ள இருளைப்போல், உள்ளத்திலும் இருள் உண்டு. உள்ளத்தின் இருளை நீக்கி அகப்பொருளை நுகர்ச்சிக்கும் பொழுது கிடைக்கும் அனுபவம் வேறு. அதை பிரணவத்தில் அடங்கும் மந்திரமாக திருமூலர் விளக்குகின்றார். அந்தப் பிரணவப் பொருளே உள்ளத்தின் இருளை நீக்குகிறது. உள்ளத்திலேயே ஒளி வீசத் தூண்டுகிறது. ''ஆரழல் வீச உருக்கிய ரோமம் ஒளிவிடுந்தானே''.

''இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடுந் தானே''.

(திருமந்திரம்...93)

இறைவன் அருளோடு கூடி உயிர் சிவமாகும் தன்மையை பெறுகிறது. யோகத்தாலும், தவத்தாலும், ஞானத்தாலும் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. சீவ தன்மை மாறி, சிவமாம் தன்மை வெளிப்படுகிறது. மலங்களால் கட்டுப்பட்ட உயிரானது பல பாச வகைகளில் ஆழ்ந்து இருளில் நிற்கிறது. இறைவனுடைய அருள் இருளை நீக்கி ஒளியை நிரப்புகின்றது. சிவனுடைய சார்பால் சீவன் சிவத்தன்மையைப்

பெறுகிறது. அப்பொழுது பழமையான மூல மலமாகிய ஆணவ மலமும், அந்த மலத்தை நீக்க இறைவன் புகுத்திய கன்ம மலமும், மாயா மலமும் சூரியன் முன் சந்திரன் போல ஒளி மழுங்கும். ''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்'' என்றார் மாணிக்க வாசகர். சூரியனுடைய ஒளி இயல்பாக உள்ளது. சந்திரனுடைய ஒளி சூரியனிடமிருந்து பெற்றது. பேரொளியில் சிற்றொளி ஒடுங்கி இருப்பது போலாகும். ''அறிவு அறிவுள்ளே அழிந்தது போல'' என்பார் திருமூலர். சிவன் அறிவு மயம், சீவனும் அறிவுடையது. அறிவுடைய சீவனுக்கு அறிவுமயமான சிவனைத் தவிர ஒடுங்குவதற்கு வேறு இடம் இல்லை. சிவ ஒளியோடு ஆன்ம ஒளி பொருந்துவதே இயல்பாகும். அது சுத்த வெளியிலே நிகழ்கின்றது. அந்தச் சுத்த வெளியானது சிவமும் சீவனும் பொருந்தும் இடமாகும். இவ்வாறு பொருந்துவதால சீவன் சிவமாம் தன்மையைப் பெறுகின்றது. ''சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ சுத்த வெளியிற் சுடரிற் சுடர் சேரும்'' (திருமந்திரம்....135) இந்த நிலையில் பேரறிவின் ஒளி உள்ளத்திலே வீசும் தன்மையுடையதாகி உயிரானது மலங்களின் சேர்க்கையிலிருந்து தன்னை விடுபடுத்திக்கொள்கின்றது. மலங்களின் ஆட்சியின் வலிமை குன்றி சீவன் தன்னொளி பெறுகின்றது. மலங்களும் வியாபகம் இழந்து நிற்கின்றது.

''தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமு மப்பாச பேதமு
மான குணமும் பராமமா வுபாதியும்
பானுவின் முன்மதி போற்பட ராவே''

(திருமந்திரம்..2314)

மனம் தன்னைப் பற்றியே கருதிக்கொண்டிருக்கின்றது. தான் ஆகி விடுகிறது. எதை நினைக்கிறாயோ அது நீயாகிறாய் என்கிறது உபநிடதம். சிவனையே எண்ணி, சிவசமாதியில் கூடியிருந்தால், தான் அவனாகும். சீவன் சிவமாம் தன்மையைப் பெறும். மனதை ஒடுக்கி, குற்றங்களுடைய சம்பந்தத்தைக் குறைத்துக் கொண்டு, புலன்களின் செயல்களைக் கட்டுப்படுத்தி, சிந்தையை ஒருமுகமாக்கி இறைவனுடைய திருவடிகளிலே பதித்து இறை உணர்விலேயே தன்னை பொருத்திக்கொண்டிருப்பது சமாதியாகும். இங்கே யோக சாதனை விளக்கப்படுகின்றது. இந்த யோக சாதனையால் சிவமாம் தன்மை கிட்டுகிறது. அப்போது அநாதியே உயிரைக் கட்டுப்படுத்தும் ஆணவ மலத்தின் சக்தி அகற்றப்படுகிறது. பாசங்களால் கட்டுண்ட தன்மை அகலுகிறது. தூல உடல், சூக்கும உடல் மலங்கள் நீக்கி புத்தொளி பெற்று விளங்கும். திருவருளில் ஒன்றுவோர்க்கு சிவ வாழ்வு கிடைக்கும். பிறப்பினை வளர்க்கும் இயல்பு சக்தி இழந்து, குற்றமிலாத, ஒளி பெற்ற உடலுடன் வாழலாம்.

''தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்
ஆன மலமறும் அப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்
தூனங்கள் எட்டு மொழித்தொன்று
வோர்கட்கே.''

(திருமந்திரம்..2320)

ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்ட உயிரானது தன்னை ஒரு விசேஷ தன்மை பெற்றதாகக் கருதி, பிற உயிர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டு, ஒரு வித கலக்கத்தில் நிற்கும். இந்த நிலையில் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்படும். கருவிகளின் இயக்கங்கள் உயிரை புறத்தேயுள்ள அனுபவங்களில் ஈடுபடுத்தி முழுமையை மறைக்கும். இதுவே பிறப்பிற்கு வித்திடும். ஆன்மாவின் உண்மை சொரூபம் மறைக்கப்படும். இதற்கு மாறாக திருவருளால் ஞானம் பெற்ற உயி புலன், பொறிகளின் இயக்கத்திற்கு அப்பாற்பட்டு நிற்கும். அதே நேரத்தில், அந்த இயக்கத்தை தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும். விருப்பு வெறுப்பு ஆகியவை நீங்க, ஆன்மாவானது இதுவென்றும், அதுவென்றும் வேற்றுமை பாராது உண்மை அறிவைப் பெற்று, அந்த உண்மை அறிவினால் தன்னை ஒடுக்கிக் கொண்டு நிற்கும் பொழுது சிவத்துடன் கலந்திருக்கும். அப்பொழுது உடல்கூறுகளின் வட்டத்திற்கப்பால் வியாபகமாக நின்று, சிவகதி பெற்று ஞான சொரூபியாக நிற்கும். இதுவே உயிரின்சொரூப இலக்கணமாகும்.

''எல்லாந்தன் னுட்புக யாவுளுந் தானாகி
நல்லாந் துரியம் புரிந்தக்கா லல்லுயிர்
பொல்லாத வாறாறுட் போகாது போகமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே''.

(திருமந்திரம்..230

எது ஆனந்த அனுபவமாகும்? திருவருளிலே முடிவாக தோய்ந்து நிற்கும் நிலையே இந்த அனுபவமாகும். இதில் தியானம் கைகூடிடும். ஞானமே வடிவாக உள்ளுணர்வுகளெல்லாம் சிவதியானத்தில் நிற்கும். சிவனறிவே தம்மறிவாக பொருந்தி, உடலையும், உடலைச் சார்ந்த உணர்வுகளையும் கடந்து உயிரானது தன்னிலையில் நிற்கும். கருவி கரணங்களின் இயக்கம் இல்லாமையால் இது சமாதி நிலையாகும். அதாவது, தன் தன்மைகெட்டு அரனின் தன்மைதானே வெளிப்படும் காட்சியாகும். இந்தன்மையை எய்துவது உபநிடத மகாவாக்கியமான தத்துவமசி நிலையாகும் என்பார் திருமூலர். அதாவது, சிவ சக்தியினிடையில் உயிரானது தற்போதமற்று ஒடுங்கிக் கிடக்கும் அனுபவமாகும். இறைவனின் அருள் அணைப்பிலே ஆன்மா செயலற்று தாயிடம் ஓர் குழந்தை இருப்பது போல் இருக்கும். உயிர் தன்னையே சிவம் என்று கருதிக் கொள்வதில்லை. ஆனால், சிவ ஒளியில் சீவ ஒளி கலந்து தனித்தன்மை இழந்து சிவவியாபகத்தில் நிற்கும். இதை திருமூலர் ''தூங்கிக் கண்டார் சிவ யோகம் தம்முள்ளே'' என்பார்.

''அனந்த பாகு மரனருட் சத்தியிற்
றானந்த மாமுயிர் தானசமாதிசெய்
தானந்த மாயுணர் வாயுள் ளுணர்வுறிந்
கோனந்த வாய்க்கு மகாவாக்கிய மாமே''.

(திருமந்திரம் ..232

(தொடர்ந்து வரும்)

# திருமந்திரமே

## சிவகதிக்கு வித்தாம்



**திரு. துரை. சுந்தரேசன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**

**சென்னையில் நவம்பர் 14, 15 நாட்களில் நடைபெற்ற திருமந்திர மாநாட்டைத் தொடக்கி வைத்து நம் ஆணையாளர் ஆற்றிய உரை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடப்படுகிறது.**

சிறப்புமிகு இவ்விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் கயிலைப் புனிதர் சீலத்திரு ஞானப் பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களே! 'அருளாளர் அருள் அனுபவம்' என்னும் சிறந்த தலைப்பில் எங்கள் அறநிலையத்துறை வெளியீடான 'திருக்கோயில்' இதழில் தலை சிறந்த ஆன்மீக சிந்தனைகளை எழுதி வரும் தமிழக அரசின்தலை சிறந்த தலைமைச் செயலாளர் திருமந்திரச் செம்மல் அருளாளர் டி. வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். அவர்களே! அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களே, சிவத்திரு குருபழநி அடிகளார் அவர்களே! பேராசிரியர் பெருமக்களே! திருமூலர் திருமந்திர திருமன்றத்தின் அமைப்பாளர்கள் டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி அவர்களே! சிவத்திரு மு. கிருஷ்ணன் அவர்களே! மற்றுமுள்ள சான்றோர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

திருமூலர் திருமந்திரத் திருமன்றத்தின் சார்பில் நடைபெறும் இந்த நான்காம் மாநாட்டிற்கு என்னைத் தொடக்கவுரை ஆற்றுமாறு பணித்த அன்புள்ளங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ்செய் யுமாறே''

என்று பாடி தமிழுக்குப் பெருமை செய்த சித்தர் திருமூலர் நம் தமிழகம் செய்த தவமாகத் தோன்றியவர். நம் புண்ணிய பாரதம் செய்த பெருந்தவமாக இன்றும் போற்றப்படுபவர்.

சிவயோகியும் சித்தருமான திருமூலருடைய இயற்பெயர் சுந்தரர் என்பதாக அறிகிறோம். இவர் இன்றைக்கு சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தோன்றி வாழ்ந்த மகா புருஷராக மதிக்கப்படுகிறார். சிவபெருமானின் தலைமை மாணாக்கர்கள் எண்மர். அவர்களில் ஒருவர்தாம் நம் திருமூலர்.

சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், அகத்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய எழுவரோடு தாமும் ஒருவராக சிவபெருமானிடம் ஞானம் பயின்றதாக திருமூலரே ஒரு திருமந்திரத்தில் கூறியிருப்பதை இங்குக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

''நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரமர்
என்றிவர், என்னோடு எண்மரு மாமே''


என்று கூறுகிறது ஒரு திருமந்திரம். சிவயோகத்தில் சிறந்து 'நாதர்' பட்டம் பெற்றபடியால் சுந்தரர், சுந்தரநாதர் என்று சிறப்பிக்கப் பெற்றார்.


சிதம்பரத்தலத்தில் நடராஜ பெருமானின் திருநடன தரிசனம் காண வந்த பதஞ்சலி, வியாக்கிரமரோடு சுந்தரநாதராகிய திருமூலரும் வந்து சிவபெருமானின் திரு நடனக் கோலத்தை தரிசித்துச் சென்றார் என்பதையும் ஒரு திருமந்திரம் கூறுகின்றது.

கயிலையில் தம்முடன் உடன் பயின்ற மாணவரான அகத்தியரை தரிசிக்கும் பொருட்டு ஒரு முறை தமிழகம் வந்த பொழுது தான் சுந்தர நாதர் திருமூலர் என்று பெயர் பெறும் வண்ணம் ஒரு அரிய நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

அகத்தியரைக் காணும் ஆவலில் ஆகாய வழியாகப் பறந்து வரும் சுந்தரநாதர் வழியில் திருக்கேதாரம், பசுபதி நேபாளம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருக்கச்சி ஏகம்பம், திருவதிகை, சிதம்பரம் முதலான சிவத்தலங்களைக் கண்டு வணங்கி, திருவாவடுதுறைக்கு வந்து சிவபெருமானை வழிபடுகிறார். திருவாவடுதுறையை விட்டுப் பிரிய அவருக்கு ஏனோ மனமே வரவில்லை. தம்மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு தென் பொதிகை புறப்பட்டவர் திருவாவடுதுறை விட்டு காவிரியின் கரைக்கு வரும்போதுதான் அங்கே ஒரு காட்சியைக் காண்கிறார்.

சாத்தனூரைச் சார்ந்த மூலன் என்ற இடையன், பசுக்கூட்டங்களை மேய்க்கவந்தவன், பாம்பு கடித்து மாண்டுகிடக்க, அவன் பிரிவை ஆற்றாத பசுக்கூட்டம், அவனைச் சுற்றி நின்று கதறிக் கண்ணீர் விடுவதைக் காண்கிறார் சுந்தரநாதர். 'வாடிய பயிரைக் கண்டபோதும்' வாடுவதல்லவா அருளாளர்களின் அருள் உள்ளம். உடன்தாம் பெற்றிருக்கும் அட்டமா சித்திகளில ஒன்றான கூடுவிட்டு கூடுபாயும் சித்தியால் மூலன் ஆகிய இடையன்





உடலுககுள் தம்முயிரைக் கொண்டு செலுத்து கிறார் சுந்தரநாதர். பசுக்கூட்டங்களைத் தத்தம் இல்லங்களுக்குக் கொண்டு போய் சேர்த்து அவற்றை மகிழ்விக்கிறார்.

சாத்தனூரில் இருந்த ஒரு மடத்திலேயே திருமூலர் இரவு தங்கி யோகம் செய்ய இடையன் மூலனின் மனைவி, திருமூலரைத் தன் இல்லத்திற்கு வருமாறு அழைக்கின்றாள். திருமூலரோ பதிலொன்றும் பேசவில்லை. ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் மூலனே யோகியானான் என்று கூறி, அவன் இனி இல்லறத்திற்குப் பயன்படான் என்று அவனுடைய மனைவியை அழைத்துச் சென்று விடுகின்றார்கள். மறுநாள் காலை சுந்தரநாதர் தமக்கு உரிய உடலைத் தாம் மறைத்து வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று தேடுகிறார். ஆனால் அங்கே அவருடைய உடலைக் காணவில்லை. ''சிவாகமங்களைத் திருமூலனாய்த் தமிழில் படைக்க வேண்டுமென ஈசன் விரும்பி, எம்முடலை மறைத்து அருளினன் போலும்' என்பதாகச் சுந்தரநாதரும் தெளிந்து அற்றைநாள் முதல் திருமூலர் என்ற திருநாமம் பூண்டவராய், திருவாவடுதுறை சிவாலயத்திற்குத் திரும்ப, ஆண்டிருந்த அரச மரத்தடியில் சிவயோகத்தில் ஈடுபட்டு ஆண்டுக்கொன்றாக மூவாயிரம் திருமந்திரங்களை அருளிச் செய்தார் என்பதாக அவருடைய வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் பாடியிருக்கக் காண்கிறோம்.

3,000 ஆண்டுகள் திருவாவடுதுறையில் யோகம் செய்து 3000 திருமந்திரமாம் தமிழ் மூவாயிரம் சாற்றி மீண்டும் திருக்கயிலையை அடைந்து திருமூலர் சிவபெருமானின் திருவடி பேறு பெற்றார் என்பது சேக்கிழார் கூறும் திருமூலர் வரலாறாகும்.

''முன்னியவப் பொருண்மாலைத் தமிழ்
மூவாயிரம் சாற்றி
மன்னியமூ வாயிரத்தாண்டு இப்புவிமேல்
மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால்
திருக்கயிலை
தன்னில்அணைந்து ஒருகாலும் பிரியாமை
தாமடைந்தார்''

என்கிறது பெரியபுராணம்.

''திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமாம்-அருமந்த
புந்திக்குளே நினைந்து போற்றுமடியார் தமக்கு
சந்திக்கும் தற்பரமே தான்!''

என்ற வெண்பா, தமிழ் மந்திரமாம் திருமந்திரத்தின் அருமையைப் பெருமையைச் சாற்றுகிறது.

திருமந்திரத்திலே யோகம் உண்டு, மருத்துவம் உண்டு, பக்தி உண்டு, அரிய தத்துவங்கள் உண்டு, வழிகாட்டும் நீதி போதனைகள் எல்லாம் உண்டு.

அரியதான மானிடப் பிறவியைப் பெற்றும் இறைவன் திருவடி வணங்காத மாந்தரை, மாக்கள் விலங்குகள் என்று சாடுகிறார் திருமூலர்.

'பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறுஇழந் தாரே''

என்ற திருமந்திரம் எவ்வளவு இனிமையாக இறைபக்தியின் அவசியத்தைக் கூறுகிறது பாருங்கள்.

மானிடர்கள் 'சில்வாழ் நாள் பல்பிணி சிற்றறிவு' கொண்டவர்கள்''. இறைவனோ 1. தன் வயத்தன் ஆதல் 2. தூய உடம்பினன் ஆதல் 3. இயற்கை உணர்வினன் ஆதல், 4. முற்றும் உணர்தல், 5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், 6. பேரருள் உடைமை, 7 முடிவில ஆற்றலுடைமை, 8 வரம்பில் இன்பமுடைமை ஆகிய போற்றரும் எண் குணங்களைக் கொண்டவன்.

''கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

என்கிறார் திருவள்ளுவர்.

அளப்பிலா அருள்குணம் கொண்ட இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு தனு கரண, புவன, போகங்களைத் தந்து ஆட்கொள்கிறான். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். இறைவன் தந்த உடலைப் பேணுவதன் வாயிலாக, உடலுக்குள் வீற்றிருக்கும் உயிரைப் பேண வேண்டும். அதனால் சிவகதி பெறுவதற்கு வாய்ப்பாகும் என்று அறிவுறுத்துகிறார் திருமூலர்.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினில் உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே''

என்பது திருமந்திரம்.

இந்த உடலையே கோயிலாக ஆக்கும் ஒப்பற்ற வழியையும் நமக்குக் கண்டு சொல்லும் பெருமகனார் திருமூலர்தான்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே''

வஞ்சகம் செய்யக் கூடிய ஐம்புலன்களை மணி விளக்குகள் ஆக்கி, சீவனையே சிவலிங்கமாக கண்டு வழிபடும் ஒப்பற்ற ஞானமார்க்கத்தை நமக்கு அருளுகிறார் திருமூலர்.



*தேசத்தில்*
*யாரும் சதமல்ல நின்தாள் சதம்*
*கச்சி ஏகம்பனே.*

**—பட்டினத்தார்**

சித்தர் திருமூலர் வற்புறுத்தும் ஒப்பற்ற ஒரு நெறி அன்பு நெறி, அன்பு இருந்தால் அன்பு வடிவமான சிவபெருமானை யாரும் சென்று அடையலாம். எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம் என்று இன்று வற்புறுத்தப் படும் ஒப்பற்ற ஒருகருத்தை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்திச் சென்ற தலைசிறந்த சிந்தனையாளர்தான் நம் திருமூலர்.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று அறிவுறுத்திய அருளாளர் வழியில் நம் வையம் வழி நடக்க வேண்டும்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

என்ற திருமூலர் கருத்தின் வழி, அன்பு செய்வோம்; பேதம் பாராட்டாமல் யாவர் மீதும் அன்பு செய்வோம், அதற்கு இத்தகைய மாநாடுகள் நமக்கு நல்ல வழிகாட்டும் என்பது என் திண்ணமான நம்பிக்கை.

'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என்று போற்றினார் சுந்தரமூர்த்தி நாயனார். திருமூல நாயனாரின் திருமந்திரச் செம்பொருளை நுகர்ந்து நாளும் இன்புறும் ஆயிரக் கணக்கான அன்பர்களை இன்றைக்கு ஒரு சேரக் காணும் ஒப்பற்ற பேற்றினைத் தந்து மாநாட்டை தொடங்கி வைக்கவும் ஒரு அரிய வாய்ப்பையும் வழங்கியமைக்கு என் மனமார்ந்த மகிழ்ச்சியை வணக்கத்தைத் திருமந்திர திருமன்றத்தார்க்குத் தெரிவித்து அனைவருக்கும் நன்றி கூறிஅமைகின்றேன்.

நன்றி, வணக்கம்.



# தித்தித்திருக்குமென் கற்பகமே


எம். பரமேசுவரன், எம்.ஏ.,
வட்டாரத் தணிக்கை அதிகாரி,
இந்துசமய அறநிலையத்துறை, சேலம்.


கரும்புவில் ஏந்தி விரும்புளம் எய்யும் கவர்கண்ணி
சுரும்புவில் பாட அரும்புவில் பூக்கும் கருங்குழலீ,
பொருந்துவில் தோளர் விருந்துகொள் மேனி இடம் கொண்டாய்
திருந்துமென் நெஞ்சில் தித்தித் திருக்குமென் கற்பகமே. 1.

தித்திப் பதுன்பெயர்; சித்திப் பதுன்அருள், நித்தமும்நான்
பத்தி மலரொடு பற்றிப் பரவுவ துன்பதங்கள்:
வித்தில் எழுந்துபல் வித்தாய் விளைந்தநின் வித்தையையென்
சித்தம் தெரிந்திட வைத்தஎன் சித்தினி, கற்பகமே. 2.

சித்தினி. செம்பொன் சிலைவடி வில்வரும் செய்யவளே;
பித்தம் தெளிந்திடந் தத்துவம் தந்தருள் வித்தகியே;
சத்தப் முதலா உருவப் எழுந்திட வைத்ததனுள்
புத்துயிர் மாயை புனைந்துபின் போக்குமென் கற்பகமே. 3.

இதழூரும் வாயில், இனிப்பூற நின்பெயர் சொல்கின்றேன்:
பதமூரும் நாவினில், பாலூற நின்புகழ் பாடுகின்றேன்:
மதமூரும் நெஞ்சினில் மாண்பூற நின்பதம் போற்றுகின்றேன்:
நிதமூரும் வாழ்வில் மகிழ்வூற வைப்பாய்என் கற்பகமே. 4.

தோளும்மெல் ஆகமும், தோகைச் சுரிகுழல் தொட்டாட,
மூளும் சிரிப்புடன் அஞ்சேல் எனஅகங் கையாட,
மூளும் பகைகெட மூவிலை வேலாட, முன்வந்தாய்,
தாளும், சதங்கையுப் தண்டையும் கண்டேன்என் கற்பகமே. 5.

சித்திரம் ஆகி, விசித்திரம் ஆகி, விரிந்தெங்கும்
புத்தழ காகி, பொருபுலன் ஐந்தின் பொருளாகி,
சித்தமு மாகி, செயல்பல ஆகி, செயல்இல்லா,
முத்தியும் ஆகிய மோகம் முகிழ்நகை கற்பகமே. 6.

ஊண்பிறப் பற்றார் உலகினில் உய்யும் வழிகாட்டி
பாண்கடல் ஓரம் படர்மணப் புன்னை அடர்காவில்
ஆண்மயில் ஆகி, அருவுரு தன்னை வழிபட்ட
மாண்மதில் மாட மயிலையில் வாழுமென் கற்பகமே. 7.

நெஞ்சகச் சேற்றில் நிமிர்ந்தசெந் தாமரை ஆகநின்றாய்;
வஞ்சக ஆரிருள் நெஞ்சில் வளர்நிலா ஆகவந்தாய்;
அஞ்சகர் ஆடுமிக் கூட்டில் அருஞ்சுவைத் தேனுமானாய்;
நஞ்சக நாகம் நகும்குழல் நங்கைஎன் கற்பகமே. 8.

கெட்டவை கெட்டன: ஐவரின் கேண்மைகள் அற்றன. நான்
நட்டவை நஞ்சுகள் நெஞ்சின் நீங்கின; நானெனநான்
தொட்ட உடல்தரும் தொல்லைகள் விட்டுத் தொலைந்தனவே,
பட்டதால் நின்சடைப் பார்வைஎன் மேல்அருள் கற்பகமே. 9.

பெண்ணுரு ஆகிப் பிணைத்தனை என்னை; பெருவெளியில்
மண்ணுரு ஆகி பயக்கினை என்னை; மனம்விரும்ப
நண்ணுரு தன்னில் நலிவுறும் என்னை, நயந்துவந்து
கண்ணருள் காட்டிச் கனிவொடு காக்குமென் கற்பகமே. 10.

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(56)

எந்தையே! எம் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்'' என்று போற்றிப் புகழ்ந்தார்கள். சிவபெருமான் 'உம்பர்களே! உங்கள் அரசை உங்கட்கே உவந்து அளித்தோம். சென்று நன்று வாழ்வீர்களாக' என்று கூறி கருணை புரிந்தார்.

பிரமதேவர் அக்குழுவில் தன் மகனாகிய தட்சன் மட்டும் பிழைக்கவில்லையென்றறிந்து சந்திரசேகரரை வந்தனை செய்து 'அந்தி வண்ணத்து அண்ணலே! நிந்தனை செய்த தட்சனை நரகம் புகாவண்ணம் தண்டித்து நல்லருள் புரிந்தீர்; அவனையும் பிழைத்தெழுமாறு கருணை புரியும்'' என்று வேண்டினார். பானுகம்பன் தட்சனுடைய உடம்பைக் கொணர்ந்தான். தட்சனுடைய தலை நெருப்பில் இட்டுச் சாம்பரானபடியால் யாகத்தில் மாண்டிருந்த ஒரு ஆட்டுதலையைப் பொருத்தி தட்சனை உய்வித்தார். சிவன் பரம்பொருளா? என்று ஆட்டுந்தலையுடைய தட்சன் ஆட்டுத் தலை பெற்று எழுந்தான். வீரபத்திரரையும் விடை மீது விமலரையுங்கண்டு தன்பிழையுணர்ந்து துயரக் கடலில் ஆழ்ந்தான். அஞ்சினான் அருட்கடலாகிய இறைவன் 'தட்சனே! அஞ்சற்க' என்று பட்சமொடு பகர்ந்தார். தட்சன் எம்பெருமானுடைய இணையடிமீது வீழ்ந்து 'ஐயனே! வெய்யனேன் செய்த தீமை அளவிட முடியாது. அதை நினைதொறும் நினைதொறும் நெஞ்சைச் சுடுகின்றது. என் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்' என்று வேண்டினான்.

உமாதேவியார் வீரபத்திரரையும் பத்ரகாளியையும அருகில் அழைத்து, முதுகைத் தட்டி ''நீங்கள் கணவனும் மனைவியுமாக வாழ்க' என்று ஆசி கூறினான். சிவபெருமான் மாலயனாதி வானவரை நோக்கி, உம்மைத் தண்டித்தது உமது வினை நீக்கம் பெறும் பொருட்டேயாகும். அதனை நினைந்து நாண வேண்டாம்' என்று கூறி சிவபெருமான் கயிலை சேர்ந்தார். வீரபத்திரருக்கு ஒரு தனிப்பதந் தந்தார். அதில் பத்ரகாளியுடன் வீரபத்திரர் வீற்றிருந்தார்.

தேவர்கள் தத்தம் உலகம் டோனார்கள்.

'மகனே! முன்னே எங்பால் என்ன உணர்ந்தாய்? இப்போது என்ன செய்தாய்? என்ன நினைந்தாய்? இத்தனை நலங்களும் யாரிடம் பெற்றாய்? என்ன துன்பம் அடைந்தாய்? இப்போது உன் எண்ணம் என்ன? என்று பிரமதேவர் தட்சனைப் பார்த்துக் கூறினார்.

''யாதுமுன் உணர்ந்தனை; யாது செய்தனை
யாதவண் கருதினை; யாரில் பெற்றனை;
யாதுபின் செய்தனை; யாது பட்டனை
யாதிவண் பெற்றனை யாதுன் எண்ணமம''.

அழிவில்லாத அமரர்களுக்கும் தவவலிமை மிகுந்த முனிவர்களுக்கும், பூதலத்தில் வாழும் அந்தணர்களுக்கும் நீ எமனாக ஆனாய்.

''சீரையுந் தொலைத்தனை; சிறந்த தக்கனாம்
பேரையுந் தொலைத்தனை பேதை யாகிநின்
நேரையுந் தொலைத்தனை ஏவல் போற்றுநர்
ஆரையுந் தொலைத்தனை அலக்கண்
எய்தினாய்''.

தன்னாலும் தெரியாது, சொன்னாலுந் தெரியாது என்ற பழமொழிக்கு நீ இலக்கியமானாய். வரங்கொடுத்த வள்ளலையிகழ்ந்தாய். ஆன்றோர்கள் கூறிய அறவுரையைக் கேட்டாயில்லை. வேதங்களை ஓதிய நீ பேதையாகி விட்டாய். விதிவழி மதி சென்றது. ஆதலால் இனிகாதலால் அரனாரை அருச்சனை செய். பிறவித்துயரம் நீங்க அயர்ச்சியில்லாது முயற்சி செய். உயர்ச்சியடைவாய்''

ஆட்டு முகமுடைய தட்சன் திருந்திய உள்ளத்துடன் தான் செய்த பிழைக்கு வருந்தி 'தந்தையே! தாங்கள் உரைத்த வண்ணம் சிவ பூசை செய்து பவ நோய் களைவேன். முன் ஒரு சமயம் நீரும் திருமாலும் மதி மயக்க முற்று நின்றதையும், சிவனருள் செய்ததையும் கூறும். என் அறிவு மேலும் தெளிவு பெறும்' என்றான். பிரமதேவர் கூறினார்.

''மனித ஆண்டு முந்நூற்றறுபது சேர்ந்தால் தேவயாண்டு ஒன்று, இந்த தேவயாண்டு பனிரண்டாயிரம் சேர்ந்தால் ஒரு சதுர்யுகம் எனக்கு ஒரு பகலாகும். அப்போது உலகம் யாவும் நீருள் முழுகிவிடும். எங்கும் வெள்ளமாகி விடும். நான் ஓய்வு எடுத்து உறங்கச் செல்லுவேன். அப்போது அந்த வெள்ளத்தில் திருமால் ஓராலிலை மீது சிவசிந்தையுடன் படுத்திருப்பார்.

''வாளும் ஒடுங்கும் பரிதி மாமதியொடுங்கும்
நாளும் ஒடுங்கும் தமது நாளும் ஒடுங்குற்றே
கோளும் ஒடுங்கும் குலிசபாணி முதல்வானோர்
கேளும் ஒடுங்கும் புவனிகேடு படுங்அன்றே''.



ஜனலோகத்தில் வாழும் முனிவர்கள் புகழ ஆலிலைச் சயனனாம் கண்ணன் கண்விழித்து, பன்றி வடிவாகி நீரில் முழுகிய நிலத்தைப் பந்துபோல் எடுத்து நிலை நிறுத்தினார்.

அப்போது ஆயிரம் சதுர்யுகம் கழிந்து எனக்குப் பகல் வந்தது. நாம் உலகை எடுத்து நிலைநிறுத்தினோம் என்ற செருக்குடன் நாராயணர் பாற்கடலில் படுத்துறங்கினார்.

நான் தேவரையும் மனிதரையும் விலங்குகளையும் செடி கொடிகளையும் மண்ணையும் விண்ணையும் படைத்தேன். அவ்வாறு படைத்த எனக்கு 'யானே பரம' என்னைவிட வேறு கடவுள் இல்லை' என்று எண்ணிச் செருக்குற்றேன். நாம் உறங்கினால் உலகம் ஒடுங்குகின்றது நாம் விழித்தால் உலகம் உண்டாகின்றது என்று எண்ணி நான் படைத்த மலைகள் கடல்கள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து வந்தேன். பாற்கடலில் கார்க்கடல் போல் கண் துயிலும் மாதவன் மார்பில் ஓங்கி ஒரு அடி அடித்து 'எழுந்திரு' என்றேன்.

''நீ யார்?' என்றேன். 'நான் உன் தந்தை, இன்னும் உனக்குத் தூக்க மயக்கம் போகவில்லையா?' என்று கூறி சீதரனார் சிரித்தார்.

நான் அவரைப் பார்த்து 'உனக்குத்தான் தூக்க மயக்கம்; நான்தான் உலகங்களைப் படைக்கின்றவன் உனக்குத் தந்தை; யானே பிரமம்' என்றேன்.

நாராயணர், 'நான்முகனே! என் நாபியில் பிறந்தவன் நீ ஆதலால் நான் உன் தந்தை' என்றார்.

நான் அவரைப் பார்த்து 'நீ தெளிவில்லாமல் பேசுகின்றாய். உன் உந்தியில் வந்ததால் நீ யென் பிதாவோ? பேஷ். அப்படியாயின் கட்டையில் பிறந்த கனலுக்கு கட்டை பிதாவாகுமா? நீ தூணில் பிறந்தாயே அதனால் தூண் உனக்குத் தந்தையா? பிருகு முனிவருடைய சாபத்தால் நீ எடுத்த பத்துப் பிறவிகளிலும் நான் உன் தலையில் எழுதியுள்ளேன். அவ்வாறு எழுதி என் கை சிவந்துளது'. என்றேன்.

இதனைக் கேட்ட விஷ்ணு வெகுண்டு கரங்களைக் கொட்டிக் கூறுவார். 'உன் உச்சித் தலையை சிவமூர்த்தி நகத்தால் கிள்ளி எடுத்தாரே. அத்தலையை இன்று வரை படைத்துக் கொண்டாயில்லை. நீ படைப்புத் தொழில் பண்ணுகின்ற லட்சணம் விளங்குகின்றதல்லவா? மூடனே! உன்னைப் பெற்ற தாயும் நானே, தந்தையும் நானே, கடவுளும் நானே, குருவும் நானே. மாயையால் மதிமயங்கினாய். பொன்னின்றிப் பூண் இல்லை. இதுபோல நானின்றி நீயில்லை.'

'நான் பரம் 'நான் பரம்' என்று இருவரும் இகலினோம். திருமால் வில் வளைத்து என் மேல் எண்ணில்லாத கணைகளைத் தூவினார்.

நான் தருப்பைகளையே பாணமாக்கிச் சொரிந்தேன். அவர் நாராயணப் படையை ஏவினார். நான் என்னுடைய பிரமாஸ்திரத்தை ஏவித் தடுத்தேன்.

திருமால் சிவாஸ்திரத்தை யெடுத்து மனதால் பூசனை செய்து என்மேல் விடுத்தார். நானும் எனக்கு முன் சிவபிரான் தந்த சிவாஸ்திரத்தை விடுத்தேன். அப்படைகள் சிந்திய நெருப்பு மழையால் உலகங்கள் எரிந்தன. கடல்கள் வற்றின. மலைகள் கரிந்தன. அந்த இரு படைகளும் உலகெங்கும் உலாவின.

அப்போது என் முகத்தில் தோன்றிய நாரத முனிவன் வந்து எங்களை நோக்கிக் கூறுவானாயினான். நீங்கள் இருவரும் யானே பரம்பொருள் என்று போர்புரிகின்றீர்கள். இருவரும் சிவ கணையை ஏவி அவமாக உலகங்களை யழிக்கின்றீர்கள். அக்கணைகளைத் தந்தவர் யார்? என்று உணர்ந்தீர்களில்லை. போரை விட்டுச் சமாதானம் அடையுங்கள். இல்லையேல் ஆதியாய் அருவருவான ஓர் பெருஞ்சோதியார் உமது நடுவில் தோன்றும்' என்று புகன்று போனான்.

அந்த அறவுரையை நாங்கள் கேட்டும் அமைதி பெறாது ஆயிரம் ஆண்டுகள் அமர் புரிந்தோம். எங்களை அடக்கியாள வேண்டும் என்று எங்கள் இடையே ஒரு பேரொளிதூண் போல் தோன்றியது. நாங்கள் அதைக்கண்டு அதிசயமும் அச்சமும் அடைந்தோம்

'சிறுவர்களே! உங்கள் போரை விடுத்து இதன் அடிமுடி தேடித் தெளிவீர்!' என்று ஒரு பேரொளி வானில் தோன்றியது. அதைக் கேட்ட நாங்கள் சினந் தணிந்தோம். அகந்தை கொண்ட மனந் தணியவில்லை. அடிமுடி கண்டவரே பெரியர் என்று முடிவு செய்தோம். நான் முடி காண்பேன் என்று கூறினேன். அச்சுதர் அடி காண்பேன் என்றார். நடை பயிலாத இளஞ்சிறுவர்கள் வானில் உள்ள கதிரவனைக் கையால் பிடிக்க முயன்றதுபோல் இருந்தது எங்கள் செயல்.

நூறு யோசனை உயரமும் அகலமும் உடைய பன்றி வடிவங்கொண்டு திருமால் தமது கொம்பால் நிலத்தைக் கிளைத்துக் கொண்டு சென்றார். நான் அன்னமாகி விண்ணில் பறந்து தேடினேன். கீழும் மேலும் செல்லச் செல்ல அடியும் முடியும் நீண்டு கொண்டே யிருந்தன.

திருமால் ஆயிரம் ஆண்டுகள் தேடினார். ஏழுலகங்களையும் அகழ்ந்தார். அடி தெரியவில்லை அயர்ந்தார். வியர்த்து மேனி மெலிவுற்றார். சிவனடியைச் சிந்தித்து வந்தித்தார்.

அன்னமாகிப் பறந்து நான் பட்டதை என்ன என்று கூறுவேன்? சிறகுகள் அயர்ந்தன. சோதியின் முடி தெரியவில்லை. உள்ளம் வெந்து நொந்து மீண்டேன்.

நானும் நாராயணரும் அச்சோதியை சோதிக்காமல் வழிபாடு செய்தோம். முக்கண் மூர்த்தி எங்கள்முன் தோன்றியருள் புரிந்தார்.

## ஞானியர் நிலையறிவீர் ஞாலத்தீரே!

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்துஇட்ட
பிச்சை எல்லாப்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன்
மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும்
தாழ்மை சொல்லிச்
சேய்போல் இருப்பர்கண் டீர்உண்மை ஞானம்
தெளிந்தவரே''

—பட்டினத்தார்

எம்பெருமான் எங்களுக்கு அருள்புரிந்து 'உங்களுக்கு என்ன வரம் வேண்டும்' என்று கேட்டார். அன்பு ஒன்று தான் வேண்டும்' என்று நாங்கள் வரம் கேட்டோம். அச்சோதி மெல்லக் குறுகி ஒரு மலை வடிவாயிற்று.

அச்சோதி எங்கள் முன் தோன்றிய நாள் சிவராத்திரியாகும். நாங்கள் அண்ணா மலையை மும்முறை வலம் வந்து செம்மை பெற்றோம். ஆதலால் மகனே! நீ சிவத்தை வழிபட்டு உய்க' என்று பிரமதேவர் தட்சனுக்குக் கூறிச் சென்றார்.

பிரமதேவன் புகன்றதைக் கேட்ட தட்சன் காசியம்பதிக்குச் சென்று கங்கையில் முழுகினான். பின்னர் திருநீற்றில் முழுகினான். கங்கைக் கரையில் மணி கர்ணிகையில் ஓராலயம் அமைத்து அதில் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப்பண்ணி, ஆயிரம் ஆண்டுகள் அன்புடன் வழிபாடு செய்தான்.

கறைமிடற்றண்ணல் கருணையுடன் காட்சி தந்தருளினார். தட்சன் எம்பெருமானுடைய இணையடிகள் மீது வீழ்ந்தான். 'எந்தையே! அகந்தையால் உம்மை யிகழ்ந்தேன். என் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்' என்றான. சிவபெருமான் தட்சனுக்கு அருள் புரிந்து கணங்கட்கு நாயனாம் பதம் நல்கினார்.

திருமால் நான்முகன் இந்திரன் ஆகியோரும் பிறதேவர்களும் வீரபத்திரரை வணங்கித் தத்தம் இடமெய்தி சிவபூசை ஆங்காங்கே செய்து தத்தம் உடலிலுற்ற ஊனங்களைப் போக்கிக் கொண்டனர்.

கருவூரில் அரசு புரிந்து வந்த முசுகுந்த சக்ரவர்த்தி ஒரு நாள் வசிஷ்ட முனிவரை வணங்கித் துதித்து கந்தவேளுக்குரிய விரதங்களைக் கூறும்படி கேட்டார். வசிஷ்ட முனிவரும் அவ்வாறே பின்வருமாறு கூறலானார்.

வார விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம் சிறந்தது. பகீரதன் என்னும் சக்கரவர்த்தி கோரன் என்னும் அரக்கனால் தன்

ஆட்சி கவரப்பட்டு அல்லலுற்றான். அவன் சுக்கிராச்சாரியர் சொற்படி வியாழன் பகலுண வும், சனிக்கிழமை பகலுணவும் கொண்டு வெள்ளிக்கிழமையன்று ஊண் உறக்கம் இன்றி மூன்று ஆண்டுகள் விரதமிருந்தான். கந்த வேளின் வேற்படை வந்து அரக்கனின் உயிரைக் கவர்ந்து சென்றது. பகீரதன் மீண்டும் தன் அரசைப் பெற்று மகிழ்ந்தான்.

சப்த ரிஷிகளில் சிறந்தவராகத் திகழ விரும்பிய நாரதர் விநாயகப் பெருமான் சொற் படி கார்த்திகை விரதமிருந்து முருகவேளை வழிபட்டார். முதல் நாள் பகல் மட்டும் உணவு கொண்டு கார்த்திகையன்று விடியற்காலையில் நீராடி தூய ஆடைகளையுடுத்தி வழிபாடுகளை முடித்து முதல்வன் புராணத்தைப் படித்து விட்டு நீர்மட்டும் அருந்தி இரவு முழுவதும் தியானம் புரிந்து கொண்டிருந்து மறுநாள் காலை வழிபாடுகளை முடித்துவிட்டுப் பகலில முனிவர்களுடன் சேர்ந்து பாரணை செய்தார். இப்படிப் பன்னிரண்டு ஆண்டுகள் விரதமிருந்து ஏழு முனிவர்களில் மேலான பதவியையடைந் தார். இன்னும் பலர் கார்த்திகை விரதத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றனர்.

ஐப்பசி மாதம் வளர்பிறையில் பிரதமை முதல் ஆறு நாட்களும் காலையில் நீராடி விதிப்படி பூசை செய்து, புராணத்தையும் படித்து வர வேண்டும். நிதமும் சிறிது நீர் மட்டும் அருந்தி வந்து ஏழாம் நாள் சிறப்பாக வழிபாடியற்றிப் பாரணம் செய்ய வேண்டும். இவ்வாறு தேவர்களும் முனிவர்களும் விரத மிருந்து மேன்மை பெற்றனர். இதுவே ஒப் பில்லாத விரதம்.

வசிஷ்ட முனிவர் கூறியதைக் கேட்ட முசுகுந்தன் நெடுங்காலம் அந்த விரதங்களைக் கடைப்பிடித்து வந்தான். கந்தவேள் மயில் வாகன மூர்த்தியாகத் தன் பரிவாரங்களோடு அவன் முன் காட்சியளித்தார். முசுகுந்தன் உலகம் முழுவதும் அரசாளும் வண்ணம் வீர வாகு முதலிய ஒன்பது வீரர்களையும் தனக்குத் துணைவர்களாகத் தந்தருளுமாறு வரம் வேண்டினான். முருகவேளும் அவ்வாறே அருளி னார்.

நவவீரர்கள் சற்றுத் தயங்கினார். பெரு மான் முசுகுந்தனின் அன்பின் சிறப்பை அவர் களுக்குக் கூறி சிலகாலம் பூமியில் இருந்து வரப் பணித்து விட்டு மறைந்தனர். அவர்களும் அவ் வாறே பூமியில்பிறந்து துணைவர்களானார்கள். முசுகுந்தன் கருவூரிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான்.

ஒரு சமயம் விண்ணுலகம் சென்று இந்திர னுக்குச் சேனாதிபதியாக இருந்து வலன் என் னும் அசுரனை யழிக்கத் துணை புரிந்தான். பின்பு இந்திரன் பூசை செய்து வந்த சோமாஸ் கந்தராகிய தியாகராஜப் பெருமானைக் கண்டு பரவசமாகித் துதித்தான்.

ஏகனே போற்றி யார்க்கும் ஈசனே போற்றி அம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடை மிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி
அம்புயா சனன்மால் இன்னும் அளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி எங்கள் நாதனே போற்றி கோதில்
செம்பொனே மணியே போற்றி சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்கண் இறைவனே போற்றி போற்றி
பொங்கரா அணிகளாகப் புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்தில் பூதி அணிந்திடு ஆதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி தாணுவே போற்றி போற்றி
முன்னெனும் பொருள்களுக் கெல்லாம் முன்னவா போற்றி முப்பால்
மன்னுயிருக் குயிரே போற்றி மறைகளின் முடிவே போற்றி
என்னைமுன் வலிந்தாட் கொண்டே இருநிலம் விடுத்தாய் போற்றி
நின்னுருக் காட்டி என்னை நினைப்பித்த நித்தா போற்றி
எவ்வெவர் தம்மை யேனும் யாவரே எனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே அவர்க்கருள் தருவாய் போற்றி
மெய்வரு தெளிவில் உன்னை வெளிப்பட உணர்ந்து ளோர்க்கு
தெய்வத போக முத்தி சிறப்பொடு தருவாய் போற்றி
அம்புய மலர்மேல் அண்ணல் அச்சுத னாதி வானோர்
தம்பதம் எமக்கு நல்கும் தற்பரா என்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம் நவின்றிட அடைந்தார்க் கெல்லா
உம்பர்தம் பதமும் ஈயும் உலகுடை முதல்வா போற்றி

(தொடர்ந்து வரும்)

## உப்பு அதிகம் சேர்ப்பது தப்பு!

பதார்த்தங்களில புளி, மிளகாய் சிறிதே சேர்க்க வேண்டும்; மிளகு, சீரகம், அதிகமாகச் சேர்த்தல் வேண்டும். கடுகு சேர்ப்பது அவசிய மல்ல. உப்பு குறைவாகவே சேர்த்துக்கொள்ள வேண்டும். அன்றி, எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம்.

—இராமலிங்க அடிகளார்

# பஞ்சட்டி அருள்மிகு அகஸ்தீஸ்வரர்



# ஆலயம்

**டாக்டர் த. அமிர்தலிங்கம்**

புண்ணிய தமிழகத்தில் தேவார மூவர் பாடல் பெற்ற திருத்தலங்கள் எண்ணற்றவை உள்ளன. அவற்றில் தொண்டைநாட்டுத் திருத் தலங்கள் முப்பத்திரண்டுள் 18-வது திருத்தல மாகப் போற்றப்படுவது திருக்கள்ளில் திருத் தலமாகும். பாலறாவாயரும் பரசமயக் கோளரி யுமான திருஞான சம்பந்தர் திருப்பதிகம் ஒன் றால் இங்கு ஆனந்தவல்லி சமேதராக எழுந் தருளியுள்ள சிவானந்தப் பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார்.

'எண்ணார் மும்மதில் எய்த இமையா முக்கண்
பண்ணார் நான்மறை பாடும் பரம யோகி
கண்ணார் நீறணிமார்பன் கள்ளின் மேயான்
பெண்ஆணாம் பெருமான் எம் பிஞ்ஞகனே''

''திகை நான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல் போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகை மேவு முதிர்சடையான் கள்ளில் ஏத்த
புகழோடும் பேரின்பம் எய்து மின்றே''

திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற திருக் கள்ளில் திருத்தலத்திற்குக் கிழக்கு திசையில் சுமார் 8 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் ஊர்தான் பஞ்சேட்டி. இத்திருத்தலத்தில் ஆனந்தவல்லி சமேதராக எழுந்தருளியிருக்கும் அகஸ்தீசுவரப் பெருமானவனை தரிசிப்பதற்கே பஞ்சேட்டி நோக்கிப் பயணம் செல்கிறோம் நாம்.

பஞ்சேஷ்டி தலபுராணம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் வரலாற்றை மிக விரிவாக எடுத்துக் கூறுகிறது. இதனை இயற் றிய ஆசிரியர் யாரெனநமக்குத் தெரியவில்லை. நைமி சாரணியத்தில் தவமியற்றி வாழும் அநேக முனி புங்கவர்களுக்கு, சூதமா முனிவர் பஞ்சேஷ்டியில் எழுந்தருளியிருக்கும் பரம் பொருளின் மகிமையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது இச்சிறப்பு மிகு தலவரலாறு.

''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்று அகத்திய மாமுனிவரைப் போற்றுகின்றார் கம்பர்.

''ஆவியந் தென்றல் வெற்பின்
அகத்தியன் விரும்பும் தென்பால்''

என்று தென்னகம் அகத்தியருக்கு மிக விருப்ப மான இடம் என்று கூறுகிறது திருவிளையாடல் புராணம்.

''சிவனை நிகர் பொதிய வரை முனிவர்'' என்கிறார் அருணகிரிநாதர். தமக்கு நிகரானவ ராக இருந்த காரணத்தால்தான் சிவபெருமான் தம் திருமணத்தின்போது இமயம் தாழ்ந்து தெற்கு உயர்ந்தபோது பூமியைச் சமப்படுத்த அகத்தியரைத் தென்னகம் அனுப்பி வைத்தார். தென்னகம் வந்து பூமியைச் சமநிலைப்படுத்திய அகத்திய முனிவர் பொதிய மலையைத் தம் வாழ்விடமாக அமைத்துக் கொள்வதற்கு முன் பன்னெடுங்காலம் பிரியமுடன் வீற்றிருந்த இடம் தான் பஞ்சேஷ்டி எனும் இப்புண்ணிய திருத்தலமாகும்.

சுகேது என்ற யட்சனுடைய சாப நீக்கத் திற்காக அகத்திய முனிவர் ஐந்து யாகங்களை உவப்புடன் ஆற்றிய இடம் இது என்பதாலேயே பஞ்சேஷ்டி என்பது இத்திருத்தலத்திற்குக் காரணப் பெயராக அமைந்து விளங்குகின்றது. பஞ்சேஷ்டி என்றால் ஐந்து யாகங்கள் என்பது பொருள் ஆகும்.

சிவபெருமானை நிந்தித்த குற்றத்தால் சுகேது என்ற யட்சனும், சும்பன், நிசும்பன், சக்தன் என்ற அவன் குமாரர்களும் சாபத்திற்கு ஆளாகி இராக்கதர்கள் ஆனார்கள். அரக்கர்கள் ஆன பிறகு அவர்கள் செய்த கொடுமைகள் மேலும் அதிகம் ஆனது. திருமாலுடைய சுதர்சனச் சக்கரத்தைப் பிளந்தும், இந்திர னுடைய வச்சிராயுதத்தை முறித்தும், ஐராவ தத்தின் கொம்புகளை ஒடித்தும், விண்ணிலும் மண்ணிலும் வாழக்கூடிய அநேக முனிவர்களை வாரி உண்டும், அளவிலாக் கொடுமைகள் புரிந்தார்கள்.

சுகேதுவின் கொடுமைக்கு ஆளான முனி புங்கவர்கள் அகத்தியரிடம் முறையிட்டுக் கொள்ள, அகத்தியர் அந்த இராக்கதர்களை வெல்லுவதற்காக சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்த இடம்தான் பஞ்சேஷ்டி.

மந்தாரை, சண்பகம், கோங்கு, பாதிரி, வில்வம், ஆத்தி, புன்னை முதலான அழகிய மரங்கள் நிறைந்த இந்திரனின் கற்பகவனமோ குபேரனின் அழகிய பூம்பொழிலோ எனக்



கடற்கரை ஓரமாய் பாதி நீரில் மறைந்தும், பாதி கண்ணுக்குத் தெரிந்தும் கவின் பெற்று விளங்கும் இவ்விடத்தையே தம்முடைய சிவ பூசைக்கு உரிய இடமாகத் தேர்ந்து கொண் டார் அகத்திய முனிவர்.

சர்வமங்களகரமான சதாசிவமூர்த்தியின் சொரூபமான சிவலிங்கத்தை ஒரு வில்வமரத் தடியில் பிரதிஷ்டை செய்து அகத்தியர் பல நாட்கள் பஞ்சாட்சர மந்திரம் உச்சரித்து ஜெபம் செய்ய இடப வாகனத்தில் பார்வதி சமேதராய் அகத்தியருக்குக் காட்சியளித்து பிரமதேவனின் வரம் பெற்ற சுகேதுவை ஆட் கொள்ளும் வழியும் கூறியருளி மறைந்து அருளி னார் சிவபெருமான்.

இடையில் நாரத முனிவரின் நல்லுபதேசத் தால் சுகேதுவிற்கும் அகத்தியரைத் தரிசிக்கும் ஆசை ஏற்பட்டு, சுகேது பஞ்சேஷ்டியை நோக்கி வந்து கொண்டிருந்தான். வரும் வழி யில் மகிஷாரண்யத்தை ஆண்டு கொண்டிருந்த மத்தன், உன்மத்தன், பிரமத்தன் என்ற அரக் கர்களோடு சுகேது போர் புரிந்து தோற்றான். வல்லவர்களுக்கு வல்லவர்களும் வையகத்தில் உண்டு அல்லவா! சுகேது மூதன் முதலாக தோல்வி கண்டு, நாணமுற்று கடலில் போய் ஒளிந்து கொண்டான். சுகேதுவைக் காணாத அவன் மக்கள் சும்பன், நிசும்பன், சக்த[illegible] மூவரும் கடலைக் கலக்கித் தந்தையைத் தே[illegible] னர். கடலானது கலங்கி, உலகின் மேல் வெ[illegible] ளம் வர ஆரம்பித்து பல உயிர்களும் துன்ப[illegible] உற்றன. அகத்தியர் உயிர்களுக்கு உண்டா[illegible] வெள்ள அபாயத்தைப் போக்கும் பொருட்[illegible] கடலைத் தம் அங்கையால் வாரி உ[illegible] டார். சமுத்திரம் முழுதும் அகத்தி[illegible] திருவயிற்றில் அடங்கி நிற்கக் கண்ட வருண[illegible] வந்து அவரைப் பணிந்து மீண்டும் கட[illegible] வெளியில் விடும்படி பிரார்த்தித்துக் கொ[illegible] டான். அகத்தியரும் வருணனின் வேண்[illegible] கோளுக்கிணங்கி கடலை வெளியேவிட, சுகே[illegible] வும் அவன் மைந்தர்கள் மூவரும் வெளி[illegible] வந்து விழுந்தார்கள். அகத்தியருடை[illegible] ஸ்பரிசத்தால் சுகேது சாபம் நீங்கி, அவருடை[illegible] வயிற்றியிலிருந்து வெளிப்படும் போதே யட்[illegible] னாக வெளிவந்து, அகத்தியரின திருவடி பண்[illegible] தான். ''இனி நாங்கள் அடையும் கதி யாது[illegible] எங்கள் பாவத்திற்கு தீர்வு ஏது?'' என்று ப[illegible] மூருகிய சுகேதுவும் அவன் மைந்தர்க[illegible] அகத்திய தீர்த்தம் என்று அன்று மு[illegible] அழைக்கப்படுவதான கடல் தீர்த்தத்தில் மு[illegible] பாவம் தீர்ந்ததோடு மட்டுமல்ல, அகத்தி[illegible] செய்த ஐந்து யாகங்களால் அநேக புண்[illegible] மும் பெற்று, சிவலோகம் சென்றனர். அகத்[illegible] யர் செய்த ஐந்து யாகம் காரணமாகவே 'ப[illegible] சேஷ்டி' என்ற திருப்பெயர் இத்திருத்த[illegible] திற்கு உண்டாகி அன்று முதல் இத்திருத்த[illegible]

மகிமை பெற்று, மண்ணில் இத்திருத்தலத்திற்கு நிகரான வேறு ஒரு திருத்தலம் இல்லை என்று கூறும்படியாக சிறப்பு பெற்று விளங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. குருதுரோகம் புரிந்த தேவேந்திரனும் பூமியில் பிறந்து அகத்திய முனிவர் வழிகாட்ட பஞ்சேட்டியில் அகஸ்தீஸ்வரப் பெருமானைத் தொழுது சாபநீக்கம் பெற்றுள்ளான். சீதையைப் பிரிந்த இராம இலக்குவனர் இருவரும் அகத்தியரைப் பஞ்சேட்டியில் கண்டு வணங்கி இங்கெழுந்தருள்யுள்ள அகத்தீசுவரரையும் பூசித்து இராவணாதி அரக்கர்களை வெற்றி கொள்ள சிவபெருமான் திருவருளைப் பெற்றுச் சென்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சிவபெருமானும் அகத்தியருக்குக் காட்சி தந்தார். ''நமக்குக் கயிலை மலை எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் இப்பஞ்சேஷ்டியில் வைத்துள்ளோம். இனி நீ பொதிகை மலைக்கு சென்று சுகமாக வாழ்ந்து வரக்கடவாய். சுகேதுவிற்கு நீ சாப விமோசனம் தந்த வைகாசிப் பௌணர்மியில வருடம் ஒருமுறை பஞ்சேஷ்டி வந்து நம்மைத் தரிசித்துச் செல்வாய்'' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

ஆகவேதான் இத்திருத்தலத்தில் வைகாசி பௌர்ணமி விழா மிக விசேடபாகக் கொண்டாடப் பெறுகிறது. மேலும் அகத்திய முனிவர் பலகாலும் இங்குத் தங்கியிருந்தபோது பிரதோஷ விழா கொண்டாடி அதன் மகிமையைத் தம் அன்பர்களுக்கெல்லாம் விளங்க எடுத்துரைத்தபடியால் பிரதோஷ விழாவும் இத்திருததலத்தில் மிக விசேடமாகக் கொண்டாடப் பெறுகிறது.

வைகாசியில் பிரம்மோற்சவம், ஆனி மாதம் வசந்தோற்சவம், ஆடிமாதத்தில் ஆடிப் பூர உற்சவம், புரட்டாசியில் நவராத்திரி உற்சவம், ஐப்பசியில் சஷ்டி உற்சவம், கார்த்திகையில் கார்த்திகை தீபம், மார்கழியில் திருவாதிரை உற்சவம், தை மாதப் தெப்போற்சவம் திருக்கல்யாணம் என இவ்வாலயத்தில் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றன.

''நமக்குக் கயிலைமலை எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் இப்பஞ்சேஷ்டியில் வைத்துள்ளோம்' என்று சிவபெருமானே அகத்திய முனிவரிடம் எடுத்துக் கூறியிருப்பதை முன்னரே கூறினோம்; இப்பஞ்சேஷ்டி தலத்தைத் தரிசிப்பதால் பெறலாகும் பேறுகளையெல்லாம் மிக அற்புதமாக தலபுராண நூல் தொகுத்துக் கூறியுள்ளது.

''இத்தலத்திலே ஒருவன் சிறிது தவம்
செய்யினும் அது அநேக மடங்காக
வளரும்',
''அகத்தியத் தீர்த்தத்தில் முழுகினவர்கள்
சகலபாவங்களும் நீங்கிடுவர்''

## வேண்டாம் சாதி

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே, கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்
அழகலவே.

—இராமலிங்க அடிகள்

''அத்தீர்த்தக் கரையில் பொன்னேனும், பொருளேனும் பூஷ்ணமேனும் வஸ்திரமேனும் சிவனடியார்களுக்குத் தானம் செய்வரேல், பூமியிற் பெருஞ்செல்வத்துடன் கூடிய அரசர்களாகப் பிறந்து வாழ்ந்து பின்னர் சிவலோகம் சேர்வர்''

''அகஸ்தீஸ்வரருக்கும், ஆனந்தவல்லிக்கும் அபிசேகம் செய்பவரும், நைவேத்யம் சமர்ப்பிப்பவரும், கோபுரங்கள் மண்டபங்கள் கட்டி வைப்பவரும், உற்சவம் உயர்வாகச் செய்வாரும் எந்நாளும் திருக்கயிலை மலையை விட்டு நீங்கிடாத பெருவாழ்வு பெறுவர்''

''இத்தலத்தில தோன்றிய மரஞ்செடி கொடிகளும் கூட சிவானந்த சித்தி பெறும் என்றால், இத்தலத்திற்கு ஒப்பான வேறுதலம் உலகிலேயே இல்லை என்றே கூற வேண்டும்''.

இத்தகைய மகிமைமிக்க பஞ்சேஷ்டி திருத்தலத்தைத் தரிசித்து சகலரும் பதினாறு பேறும் ஒருசேரப் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல அகஸ்தீஸ்வரப் பெருமான் திருவருளை வேண்டிப் பணிந்திடுவோம்.

''துதிவாணி வீறு விசயம் சந்தானம் துணிவு
தனம்
மதி தானியம் சௌபாக்கியப் போகம் அறிவு
அழகு
புதிதாம் பெருமை அறம் குலம் நோயகல்
பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் பஞ்சேஷ்டிப்
பராபரனே''

''பஞ்சேஷ்டி யின்னாளாம் எழுந்தருளும்
அகஸ்தீசன் பதம்வாழ்க
அஞ்சேல் என்று அருள் சுரக்கும் ஆனந்தவல்லி
ஆனந்தவல்லியுமை யடிகள் வாழ்க
நெஞ்சார நால்வர் சொல்லுந்தமிழ்
வேதத்திருமுறைகள் நிலைத்து வாழ்க.
வெஞ்சாத விபூதி உருத்திராக்கம் ஐந்தெழுதது
என்றும் இலங்கி வாழ்க.''




அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

### எங்குமுள ஈசனின் பெருமை
### (விபூதி யோகம்)

பெருந்தோளா! என்னுரையைக் கேட்கப்
பெரிதும்
விரும்பினைஇன் னும் சொல்வேன் கேள் (10[1)

வானோர் முனிவர்கள் மற்றறியார் என் ஆதி;
ஏனோர்க்கு மூலமே நான். (10[2)

பிறப்பிலா ஆதிநான் என்றுணர்ந்தால் பாவம
பறக்கும் பயக்கந்தீ ரும். (10[3)

புத்தி தெளிவுடைமை ஞானம்பொறையுடைமை
சத்தியம் இன்பதுன் பம், (10[4)

அச்சமுடன் அஞ்சாமை தன்னடக்கப்
தீசெயல்கள்
எச்செயலும் செய்யாமை வேறு (10[5)

பிறப்பிறப்பு, பெற்ற புகழிகழில் மாறா
நிறைமனம் ஈகை தவம், ( ,, )

யாவும் பிறக்குமிடம் யானேயாம் எனடைதைப்
பூவுலகோர் ஓர்ந்தறிதல் நன்று. ( ,, )

என்மனத் தில்பிறந்த ஏழுமுனிவர் நான்குமனு
என்சக்தி யைப்பெற்றோ ராம். (10[6)

ஆதியில் பல்லுயிரை அன்னோரே ஈன்றெடுத்து
ஞாதியாய் நின்றர் நயந்து. ( ,, )

இந்தஎன் மேன்மையை ஐயமின்றித்
தேர்ந்தோரே
பந்தமற்ற யோகியா வார். (10[7)

என்னிடமே யாவையும் தோன்றின என்பதால்
நன்றுதுதிப் டர்ஞானி கள். (10[8)

என்புகழைப் பாடியே என்றும் மனமொன்றி
இன்புடன் வாழ்வர் இனிது, (10[9)

பத்தியுடன் என்னை வழிபடும் பக்தர்க்குப்
புத்தியோ கம் ஈவேன் நான். (10[10)

அன்னோர் அகத்திருளை ஞானச்
சுடர்விளக்கால்
நன்றுநான் நீக்கிடு வேன், (10[11)

குறிப்பு:— அருச்சுனன் வேண்டுகோள்;
''பரந்தாமா! நீர் கூறுவனபோன்றே
நாரதர் முதலிய வானோர்களும்
கூறுகின்றனர். ஆனால் அவர்கள்
உம்மை முழுவதும் அறிந்ததாகத்
தெரிய வில்லை. உண்மையாக நீர்
ஒருவரே உம்மை அறிந்தவர்.
இந்த உலகத்தைப் படைத்த உம்
ஆற்றல் எத்தகையது என்று கூறிஅருள்க!
அத்துடன் உம்மை நான் எவ்வாறு
அறிந்து தியானிக்க வேண்டும் என்பதையும்
தெவிட்டாத உம் அமுதமொழியில்
அருள் வீராக! (10[12 முதல் 18 முடிய)

குருகுலப் பேராளா! கூறுகிறேன் சற்றுச்
சுருக்கமாய் என்ஆற்ற லை. (10[19)

உயிர்களின் உள்ளத்தில் ஆன்மாவாய் நிற்பேன்;
உயிர்க்குநான் ஆதிநடு ஈறு. (10[20)

ஆதித்தருள் நான்விட்ணு ஆவேன்; விளங்குபல
சோதிகளுள் ஞாயிறா வேன். (10[21)

மருத்துவருள் நானே மரீசியாம்; விண்மீன்
பெருந்தொகையுள் சந்திரன் நான். ( ,, )

விண்ணவருள் இந்திரன்; வேதத்துள் சாமம்நான்
மண்ணுயிர்க்கு நானுணர்வா வேன். (10[22)

இந்திரி யங்களில் நான்மனம் என்றறி;
ருத்திரருள் சங்கரன் நான். (10[23)

குபேரன் இயக்கருள்; எண்வசுக் கூட்டில்
அபேதமாம் அக்கினி நான். ( ,, )

விண்ணோர் புரோகித ருள்நான் வியாழகுரு;
மண்ணின் மலைகளுள் மேரு. (10[24)

சேனைத் தலைவருள் செந்திலோன்; நீர்நிலை
அனைத்தினுள் ஆழ்கடல் நான். ( ,, )

பெருமுனி வோருள் பிருகுநான்; வாக்கில்
பெருமைதரு ஓங்கார மாம். (10[25)

யாகத்தில் நாமசெபம்; யான்தாவ ரங்களுள்
மேகம் சூழ் பாஇமய மாம். ( ,, )

மரத்தில் அரச மரம்; தேவ ருள்நான்
பிரசன்ன நாரத ராம்; (10[26)

சித்தருள் நான்கபிலர்; சீரியகந் தர்வருள்
சித்திரர தர்நானே யாம். ( ,, )

யானைகளுள் ஐராவ தம்நான்; அரசனாம்
ஏனைய மானிட ரில். (10[27)

பரிகளுள் உச்சை சிரவன்; படையில்
அரியவச்சி ராயுதம் நான். ( ,, )

பசுக்களுள் காமதேன்; பாம்பில்வா சுகிநான்;
சிசுப்பெருக்கில் காமனா வேன். (10[28)

நான்அனந்தன நல்லபாம் பில்; வருணன்
நர்த்தேவுள் ;
நான்அரிய மான்பிதுர்க ளுள். (10[29)

அடக்குவருள் அந்தகன்; தைத்திய ருள்நான்
திடப்பிரக லாதனா வேன். (10[30)

கணிதருள் காலன்; விலங்குகளில் சிம்மம்;
அணிபறவை யுள்கருடன் நான். ( ,, )

வல்காற்றாம் தூய்மைசெய வல்லோருள்;
ராமானாம்
வில்வீர மாந்தருள் நான். (10[31)

நான்மகரம் மீன்களுள்; கங்கை நதிகளுள்;
நான்உயிர்கள் ஆதிநடு ஈறு. ( ,, )

சாத்திரத்துள் ஆன்மதத்து வம்நான்;
தருக்கத்தில்
சாத்திர வாதங்கள் நான். (10[32)

எழுத்தில் அகரம்; இருசொல் தொடரில்
வழுவில் புணர்ச்சியாம் நான். (10[33)

வியாபகன்நான்; செய்த வினைப்பயனைச்
சேர்ப்பதில்
பொய்யாத காலமும் நான். ( ,, )

பெண்மையுள் பேச்சு அறிவு திருவுடன்
திண்மை பொறையும் நான். (10[34)

சொல்லரிய செல்வம் நினைவுடன் சூழ்ந்துவரும்
பொல்லா மரணமும் நான். ( ,, )

சாமத்தில் நான்பிரகத் சாமமாம்; சந்தத்துள்
சேமகா யத்திரி நான். (10[35)

மார்கழியாம் திங்களுள்; மற்றும் வசந்தமாம்
சார்ந்த பருவமா றுள். ( ,, )

வஞ்சத்துள் சூதுநான்; வல்லமையும் நற்பண்பும்
துஞ்சா முயற்சியும் நான். (10[36)

பாண்டவருள் பாத்திபன்; தொண்மையாம்
யாதவருள்
மாண்புடை வாசுதே வன். (10[37)

அருங்கவிஞ ருள்சுக்கிரன்; ஆன்றதவத் தோருள்
விருத்த வியாசராம் நான். ( ,, )

குற்றங் கடிதலில் கோடாச்செங் கோலாவேன்
வெற்றியில் நீதியா வேன். (10[38)

நல்மவுனம் நானே இரகசியம் காப்பதில்;
பல்லுயிர்க்கு வித்துமா வேன். ( ,, )

ஞானிகளின் ஞானம்நான் அண்டங்கள் யாவிலும்
நானிலாத எப்பொருளும் இல். (10[39)

என்னுடை எல்லையிலா தெய்வீக ஆற்றலை
இன்றுசற்றுக் கூறினேன் நான். (10[40)

எதில்பெருமை மற்றும் எழிலும் உளதோ
அதிலெலாம் எம்அம்சம் உண்டு. (10[41)

இவ்வறிவு மட்டும் போதாது; எம்அம்சம்
எவ்வுலகும் தாங்குவதைக் காண் (10[42)


—(தொடரும்)

## நலந்தரும் நாம மந்திர இசைச் சுருள்



அறநெறியண்ணல் **கி. பழநியப்பனார்** எழுதிச் சிறுநூலாக வெளியிட்டுள்ள 'நலந் தரும் நாம மந்திரம்' என்னும் நமச்சிவாயக் கண்ணி இப்பொழுது இசைச் சுருளாக வெளி வந்துள்ளது. சென்னை தமிழிசைக் கல்லூரி முதல்வர் திருப்பாம்புரம் டாக்டர் சோ.சண்முக சுந்தரம் அவர்கள் அதற்கு இசை அமைத்துப் பாடியுள்ளார். நமச்சிவாய மந்திரம் சமய உலகில் மந்திர அரசு. சமயக் குரவர் நால்வராலும் மிகவும் போற்றப் பெற்ற மந்திரம். நமச்சிவாய என்று முடியும் ஒவ்வொரு கண்ணியும், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், சைவ சாத்திரங்கள் முதலியவைகளில் உள்ள சொற்றொடர்களைக் கொண்டு அமைக்கப் பெற்றது மிகவும் பாராட்டத் தக்கது. மேலும் ஒவ்வொரு ஐந்தாவது கண்ணியும் திருக்குறளை கொண்டிருப்பது இதன் மற்றொரு சிறப்பாகும். இசைச் சுருளில் இனிமையான பின்னணி இசையுடன் பாடகர் தெளிவான உச்சரிப்புடன் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பாடி இருப்பது கேட்போர் மனதை உருக்கும் வகையில் உள்ளது. பக்தி ஓடைக்கு ஒரு ஊற்றாக அமைந்துள்ளது என்றும் கூறலாம். ஒவ்வொரு நாளும் இதனைக் காலையில் மாலையில் வீடுகளில் இசைத்தும் திருக்கோயில்களில் ஒலிபரப்பியும் கேட்டால் கேட்போர்க்கு திருமறைகளை ஓதிய பயன் கிட்டும் என்பதில் ஐயமில்லை. வெளியிட்டோர் பழனியப்பனார் பிரமு அம்மாள் அறக்கட்டளை, 48, மேலமாசி வீதி, மதுரை-1 விலை: இரண்டு சுருள்கள் கொண்ட பேழை ரூ. 60.

# உண்டியல் தீ விபத்து தடுப்பு நடவடிக்கைகள்!




கடந்த சில மாதங்களில் ஒரு சில திருக்கோயில்களின் உண்டியலில் தி விபத்து ஏற்பட்டு, இதனால் திருக்கோயிலுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்ததைத் தொடர்ந்து இது போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சி மீண்டும் நிகழாவண்ணம்தடுக்கும் வகையில் கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

(அ) **உண்டியல் மேலோ அல்லது உண்டியல் அருகிலேயோ ''சூடம் மற்றும் ஊதுபத்தி கொளுத்தக்கூடாது"** எனப் ‹பலகையில் எழுதி, அது பக்தர்களின் பார்வைக்குப்படும் வகையில் உண்டியல் அருகிலேயே வைக்கப்பட வேண்டும்.

(ஆ) மேலும் ''பக்தர்கள் கொண்டு வரும் சூடம் மற்றும் ஊதுபத்தி ஆகியவற்றை கண்ட கண்ட இடங்களில் கொளுத்தாமல் திருக்கோயில் அர்ச்சகரிடம் அளித்து பூசைத் தட்டில் வைத்து தீபாராதனை செய்ய பக்தர்கள் ஒத்துழைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொள்ளும் அறிவிப்புப் பலகைகளை சேவார்த்திகள் கவனத்தைக் கவரும் மூக்கிய இடங்களில் வைக்க வேண்டும்

(இ) முடிந்த கோயில்களில், **''சூடத்திற்கு பதில் நெய்தீபம்''** ஏற்ற முயற்சி எடுக்கலாம்.

(ஈ) திருக்கோயிலில் பணிபுரியும் பகல் காவலர் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் உண்டியல் அருகிலும் பிற இடங்களிலும் சூடம் மற்றும் ஊதுபத்தி கொளுத்துவதைத் தடுக்கும் வகையில் விழிப்புடன் கண் காணித்துப் பணியாற்றுமாறு தக்க அறிவுரைகள் வழங்கி தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள அறிவுரைகள் அனைத்தையும் தவறாது கடைபிடிக்குமாறு அனைத்து இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், செயல் அலுவலர் களையும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்துத் திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் தெரிவித்துக் கடைபிடிக்கும் வகையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்துத் துணை மற்றும் உதவி ஆணையர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒ-ம்) துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ்.**
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-34,




கோயிற்கலைச் செல்வர்

தி. இராசமாணிக்கம்

தமிழ்க்கடவுள் எனப் போற்றித் தொழப் பெறும் முருகனை அவனிடத்து ஆராக் காதல் கொண்டு கசிந்து உருகி கண்ணீர் மல்கி ஓதும் அன்பர்கள் ''கந்தா, கடம்பா, கார்த்திகேயா'' காங்கேயா, கார் மயில்வாகனா, கலியுகவரதா எனப்பல பெயர்களால் அழைக்கிறார்கள். இவ்வாறு அழைக்கப் பெறும் அவனது பல திருப்பெயர்களில் ''கந்தன்'' என்ற பெயர் சிறப்பு மிக்கது.

## பெயரின் பெருமை:

வடமொழியில் கந்தன் என்றால் மாற்றார் வளமையை வற்றச் செய்பவன் எனப் பொருள் சொல்லப்படுகிறது.

தமிழில் கூறப்படும் பொருள்களாவன :

சரவணப் பொய்கையில் இருந்த ஆறு குழந்தைகளையும் அன்னை பராசக்தி ஒருருவாக்க, கந்தன் எனப் பெயர் பெற்றான்.

''அந்தமில்லதோர் மூவிரு வடிவும் ஒன்றாகிக்
கந்தன் என்று பேர் பெற்றனன் கவுரி தன்
குமரன்''
*(1— 13— 21)*

என்பது கந்த புராணம்.

கந்து என்பது யானையைக் கட்டும் தூண்; அது ஒரு இடத்தில் இருக்காது; தேவையான இடத்திற்குக் கொண்டு செல்லலாம். அதில் யானையைக் கட்டுவார்கள். எனவே கந்தன் என்றால் தூணைப் போன்று பற்று அற்றவன். தூண் யானைக்குப் பற்றுக் கோடாக இருப்பது போன்று அவன் அடியார்களுக்குப் பற்றுக் கோடாக உள்ளவன்.

கந்து என்றால் நடுவில் இருப்பது. எனவே கந்தன் என்றால் இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் இருப்பவன் என்றும் பொருள் சொல்லப் படுகிறது.

மேலும் மணங்கமழும் திருமேனியை உடையவன்; கந்தில் உறைபவன்; கடவுளர் ஆற்றல் எல்லாம் ஒருங்கே கொண்டவன் என்றெல்லாம் பொருள்கள் சொல்லப்படுகின்றன.

## வடிவின் அமைப்பு:

''குமாரதந்திரப்'' என்ற நூலில் இந்த வடிவினை அமைக்க இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஒரு தலை இரு கைகள் கொண்ட கந்தன், இடுப்பில் பட்டை அணிந்திருப்பான். கோவணத்தைத் தவிர மேலாடை ஏதும் இருக்காது. வலக்கையில் தடியும், இடக்கை கடி முத்திரையிலும், அமைக்கப் படவேண்டும். இந்த வடிவைப் 'பழனி ஆண்டவர்' என மக்கள் அழைப்பர். ஸ்ரீதத்துவநிதி என்ற நூலில் மேலே குறிப்பிட்டவாறு விவரிக்கப்பட்ட வடிவு 'வேலாயுத சுப்ரமணியர்' என்று கூறப்பட்டுள்ளது. இந்த நூலில் கந்தன் என்ற வடிவிற்கு வேறு விதமான அமைப்பு சொல்லப்பட்டுள்ளது. கந்தனுக்கு ஒரு தலை, இரு கண்கள், நான்கு கைகள் கூறப்பட்டுள்ளன. தாமரை மீது அமர்ந்துள்ள அவனது தலையில் கரந்த மகுடமும், மார்பில் மாலைகளும், வைடூரியங்கள் இழைத்த அணிகலன்களும் இலங்க, இடையில் நுணுக்கமான தொழில அமைந்த கடிபந்தம காணப்பட் வேண்டும். தலைக்குப் பின்னால் ஒளிப்பிழம்பு ஒளிர வேண்டும். முன் இருகைகள் அபய மற்றும் வரத முத்திரைகளில் இருக்க, பின் இரு கைகளில் கோழியும், வச்சிரமும் அமைக்கப்பட வேண்டும்.

## வடிவின் சிறப்பு:

கோவை, பெரியார் மாவட்டங்கள் மற்றும் சேலம், திருச்சி, திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களின் ஒரு சில பகுதிகள் ஆகியவற்றை உட்கொண்டது கொங்கு நாடு. இங்கு பெரும் அளவில் காணப்படும் முருகனது திருவுருவம் கந்தன் என்ற தண்டாயுதபாணி வடிவமாம். கொங்கு நாட்டைத் தவிர வேறு பகுதிகளில் (சமீப காலத்தில் ஏற்பட்ட வடபழனி நீங்கலாக) இந்த வடிவம் மூலவராக இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இதைக்கொங்கு நாட்டிற்கே உரிய சிறப்பான வடிவம் என்றால் அது சற்றும் மிகையாகாது.

இந்தத் திருவுருவம் (திண்டுக்கல், அண்ணா மாவட்டம்), மருதமலை, கிணத்துக்கடவு, குறுந்த மலை, மாதப்பூர்மலை, அலகுமலை, கனககிரி, வெள்ளிமலை (கோவை மாவட்டம்), சென்னிமலை, ஊதியூர், உதயகிரி



பவளமலை, பச்சமலை (பெரியார் மாவட்டம்) ஆகிய தலங்களில் மூலவராகக் காட்சி அளிக்கிறது.

இந்த வடிவிற்கு ஒரு சில சிறப்புகள் உண்டு பொதுவாக நின்ற திருக்கோலத்தில் ஆண் தெய்வங்களை சமபங்கநிலையிலும், பெண் தெய்வங்களைத் திரிபங்க நிலையிலும் அமைப்பது மரபு. திரிபங்கநிலை குறிப்பிட்ட வடிவின் அழகை அதிகரித்துக் காட்டும். எனவேதான் பெண் தெய்வங்களைத் திரிபங்க நிலையில் அமைத்தனர். மேலும் இறைவன் ஆற்றலின் திருவுரு என்றால், அன்னை அருளின் வடிவமாம். அன்னை ஆருயிர்களுக்குத் தானாக முன் வந்து ஆட்கொள்வதைக் குறிக்கவே அவளது ஒரு காலை முன் வைத்த நிலையில் அதாவது திரிபங்க நிலையில் உருவாக்கினர். முருகு என்ற சொல்லின் பல பொருள்களில் ஒன்று அழகு அல்லவா? மேலும் அவன் கலியுகவரதன் அல்லவா? இந்த இரு பண்புகளையும் உணர்த்தவே தண்டாயுதபாணி வடிவை நின்ற திருக்கோலத்தில் திரிபங்க நிலையில் அமைத்தனர். இதைத்தான் சென்னி மலை தல புராணம் 'குஞ்சித நிலைத்த சீரடி யிரண்டும்' எனக் குறிப்பிடுகிறது.



தண்டாயுத பாணியை மூலவராகக் கொண்டுள்ள ஒரு சில தலங்களின் சிறப்பு அவை சித்தர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகப் போற்றப்படுவது. உதாரணமாக பழனியில் போகர், மருதமலையில் பாம்பாட்டி சித்தர், சென்னிமலையில் புந்நாக்கு சித்தர் சமாதிகள் இருக்க, ஊதியூரில் கொங்கணர் கோயில் உள்ளது. சித்தர்களுடன் தொடர்பு கொண்ட காரணத்தால்தான் இங்குள்ள மூலவர்களைத் துறவிக் கோலத்தில் அமைத்தனர் போலும்.

இவன் துறவிக் கோலத்தில் காணப்படினும், தன்னை அடைக்கலம் அடைந்தோருக்கு சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வு அளிக்கிறான். இந்தப் பண்பு இவனது தந்தையான சிவபெருமானது பிச்சாடன மூர்த்தியின் இயல்புடன் ஒப்பிடத் தக்கதாக உள்ளது. இந்த வடிவின் தன்மையை

''பாரிடஞ் சூழ்வரதான் பலி கொண்டு தன்
பாதமலர்
சேர் அடியார்க்குப் பெருவாழ்வு அளிப்பான்''

என வரதுங்க பாண்டியன் தன் திருக்கருவைக் கலித்துறை அந்தாதி'யில் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

## இலக்கியச் சிறப்பு:

முருகனது பிறப்பு, திருவிளையாடல்கள் சூரன் ஆகியோருடன் போரிட்டு அழித்தது ஆகியவற்றை விரிவாகக் கூறும் புராணம் கந்தபுராணம். குமரகுருபர சுவாமிகளால் அருளப் பெற்ற குட்டிக் கந்த புராணம் 'கந்தர் கலிவெண்பா' வாகும். முருகனது தலைசிறந்த அன்பராகிய அருணகிரிப் பெருமானால் அருளப் பெற்றது, கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், மற்றும் கந்தரந்தாதி ஆகும். கவசங்களில் பெரும்பான்மையான அன்பர்களால் தினசரி பாராயணம் செய்யப்படுவது 'கந்தர் சஷ்டிக் கவசம்'.



இவ்வாறாக முருகப்பெருமானது புகழ்ப் பாடும் நூல்கள் 'கந்தன்' என்ற பெயரால் அமைந்துள்ளது அப்பெயரின் பெருமைக்கு சான்றாக உள்ளன.



சித்திர பாரதம்
க. வ: செவ்வேள்
பா: MN ராஜா
கீசகன் படும் வேதனையைச் சேடிகள் அரசியிடம் வந்து கூறுகின்றனர்.
தேவி! உங்கள் தம்பியின் உயிர் விரதசாரிணியைக் கண்டால் தான் அவர் உடலில் தங்கியிருக்கும். உடன் அவளை அனுப்புங்கள்.
விரதசாரிணி! இந்த வெரி மாலையைக் கொண்டு போய் என் தம்பியிடம் கொடுத்து உடனே திரும்பி விடு. உன் கற்பிற்கு ஏதும் ஆபத்து நேர்ந்திடாது. நான் சொல்வதை நம்பிச் செல்!
அரசியின் கட்டளையை மீற முடியாத விரதசாரிணி அவள் தந்த மலர் மாலையுடன் கீசகன் மாளிகைக்குச் செல்கிறாள்.
என் தவப்பயனே வந்தாயா நீ! என் ஆவி காப்பதற்கு. வா இந்த மலர் மஞ்சம் அமர்ந்து என் மையலைத் தீர்த்து விடு.!
கீசகன் விரதசாரிணியைத் தாவிப் பிடிக்க முயல மாலையைப் போட்டு ஓடுகிறாள் விரதசாரிணி.
ஆ, ஐயோ! என்னை இந்தக் காமுகனிடமிருந்து காப்பவர்கள் யாரும் இல்லையா?
தாய் கதிர்ச் செல்வனே! என் கற்பினைக் காவாது வானில் ஏன் நீ வீணே வலம் வருகிறாய்?
அரசவைக்குச் சென்று முறையிடுகிறாள். விராடன் கீசகனின் அடாத செயலைத் தடுக்கவில்லை. கங்கபட்டரும் செய்வதறியாது கையைப் பிசைகிறார்.
விரதசாரிணியைத் தொட்டு இழுக்க கீசகன் முன் அடி வைக்க



சூரியன் ஏவலால் தோன்றும் கிங்கரன் சூறைக் காற்றாய் வந்து கீசகனைத் தூக்கி வாசலில் எறிகின்றான்.!
ஐயோ!
அப்பொழுது அந்த அரு வேலையாக வந்த பலாயன வீமன் விரதசாரிணிக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டு துடிக்கின்றான்!
இந்த மரத்தைப் பிடுங்கி இந்தகீசகன் கதையை இப்போதே முடித்து விடுகிறேன்.!
பலாயனா! அந்த மரம் விறகிற்கு ஆகுமா என்று தானே யோசிக்கிறாய்: ஆகாது பலாயனா உன் எண்ணத்தை விடு!
கங்கபட்டர் சூசகமாகக் கூற வீமனும் அவ்விடத்தைவிட்டு அகல்கிறான்.
கீசகனின் அடாத செயலைத் தடுக்காத விராடனைக் கடிந்துரைக்கிறார் கங்கபட்டர்.
தீய தொழில் புரிவோரைத் தண்டித்துத் திருத்தா விட்டால் உன் நீதியும் செல்வமும் நிலை பெறாது விராடா!
அன்றைய இரவு பலாயனனும் விரதசாரிணியும் தனியொரு இடத்தில் ரகசியமாகச் சந்தித்துக் கீசக வதம் பற்றிச் சிந்திக்கின்றார்கள்.
பொறுமை பொறுமை பொறுமை! ஒரு காமுகன் உன் கைபற்ற வரும் போதிலுமா நான் காட்ட வேண்டும் பொறுமை! அதனால் உண்டோ ஆடவர்க்குப் பெருமை!
நம் அஞ்ஞாத வாசம் நிறைவு பெற இன்னும் இரு மாதங்களே உள்ளன. இந்நிலையில் அரண்மனையில் வைத்து கீசகவதம் செய்தால் நாம் யார் என்ற உண்மை வெளிப்பட்டுவிடும் என்பதால்தான் உங்கள் அண்ணா இன்று நீங்கள் கீசகவதம் செய்யாமல் தடுத்துவிட்டார்.
என் கற்பிற்கு ஐந்து கந்தர்வர்கள் காவல் இருப்பதாக அரசியிடம் சொல்லியிருக்கிறேன். கீசகன் அந்தக் கந்தர்வர்களால் மாண்டான் என்று மக்கள் எண்ணும் வண்ணம் அவன் ஆயுத்தைக் கச்சிதமாக முடிக்க வேண்டும்.
அப்படியானால் நான் சொல்வது போல் செய்யலாம்
பலாயனன் விரதசாரணியிடம் ஒரு ஆலோசனை கூறுகிறான்.




கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன் [23]

எத்துணை எளியவராயினும் உண்மையான பக்தியுடையவரை இறைவன் காப்பான் என்பது கண்கூடு. ''தன் கடன் அடியேனையும் தாங்குதல். என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பது அப்பர் பெருமான் வாக்கு. சிவபெருமானது திருவடிகளைத் தன் முடிமேல் வைத்து வணங்கும் சுந்தரேச பாத சேகரன் என்ற பாண்டியன் தனது நாட்டைக்காப்பதற்கு பத்துத் தேர்கள், நூறு யானைகள், ஆயிரம் குதிரைகள், பதினாயிரம் காலாட்கள் இவற்றை மாத்திரம் வைத்துக்கொண்டு சேனைக்காக ஆகும் சிலவு பூராவும் சிவாலயத் திருப்பணிக்கும் கோயிலுக்கான ஆபரணங்களுக்கும் சிலவு செய்து வந்தான்.

பாண்டியனது சேனை சிறியது என்று அறிந்து, ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்ற சோழமன்னன் பாண்டியன் மீது படையெடுத்து வந்தான். அது கண்டு கலங்கிய பாண்டியன் கோயிலையடைந்து ''இறைவனே! உனது அருள்வலி கொண்டு அரசு நடத்தும் என் சேனை சிறியது என்று எண்ணி என்னை வெல்லுவதற்குச் சோழன் வருகிறான். அவனுடன் அளவற்ற சேனை வருகிறது. என்னைக் காத்தருள்க'' என்று வேண்டினான்.

'பொன்னது வனைய வேணிப் புனித!
இப்பூமிநேமி
உன்னது வலத்தினாலே உருட்டும் என்வலத்தை
நோக்கான்
தன்னது வலத்தினால் என் தானையின் சிறுமை
நோக்கி
என்னது தேயங்கொள்வான் எண்ணினான்
போலுமன்னோ''

என்று வேண்டினான். 'பாண்டிய! உனக்கு வெற்றி கிடைக்குமாறு நாமே நேரில் வந்து போர் புரிகின்றோம். கவலையுறாதே'' என ஒரு வாக்கு எழுந்தது. மகிழ்ச்சி யடைந்த பாண்டியன் தனது சேனையுடன் சென்று சோழனை எதிர்த்தான். மேருமலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு திரிபுரத்தைத் தனது சிரிப்பாலேயே எரித்த சிவபெருமான், ஒரு வேடுவன் உருவங்கொண்டு போர்க்களத்தில் தோன்றினார். ஒரு குதிரையின் மீது ஏறி வந்த அவரைக் கண்ட சோழன் ''ஆயிரம் பரிக்கு ஒரு சேவகன் வந்தேன்'' எனக் கூறி எதிர்க்க, இறைவன் ''எண்ண முடியாத குதிரைகளுக்குச் சேவகன் யான்'' எனக் கூறி ஒரு வேலாயுதத்தை வீச, ''இந்த வேலால் நாம் நிச்சயமாக அழிக்கப்படுவோம்'' என எண்ணிய சோழன் ஓட, இறைவன் மறைந்தனர். சோழனைப் பாண்டியன் துரத்திச் சென்றான். திரும்பிப் பார்த்த சோழன் அந்த வில்லாளியைக் காணாது, பாண்டியனைத் துரத்த பாண்டியன் ஓடி வந்து மதுரையினருகிலிருந்த மடுவில் வீழ்ந்தான். துரத்தி வந்த சோழனும் மடுவில் வீழ்ந்தான். பாண்டியன் உயிரோடு மடுவிலிருந்து வெளிவந்தான். சோழன் மடுவில் மூழ்கி இறந்தான். இறைவனது கருணை எண்ணி வியந்த பாண்டியன் இறைவனை வணங்கி வாழ்ந்தான்.

தெய்வம் மனிதனைச் சோதித்துத் தான் நன்மை செய்யும் கனிந்த பழத்தைத் தானே நாம் உண்கிறோம்? அது போல இறைவன் நம்மைக் கனியாக நையவைத்து ஏற்றுக் கொள்ளுகிறார். ''நினைந்துருகும் அடியாரை நையவைத் தார்'' என்பதுதேவாரம். மதுரையில் வேளாளர் குலத்திலே அடியார்க்கு நல்லான் என்ற ஒரு சிவ பக்தன். அவன் மனைவியின் பெயர் தருமசீலை. அவ்விருவரும் தமது நிலத்தில் வரும் வருவாயிலிருந்து அடியார்களுக்கு அமுது படைப்பதையே தமது கடமையாகக் கொண்டனர். என்ன கொடிய வறுமை வந்தாலும் அவன் தனது நெறியிலிருந்து தவற மாட்டான் என்பதை உலகிற்குக் காட்ட எண்ணிய இறைவன், அடியார்க்கு நல்லானின் நிலங்களில் விளைச்சல் குறையுமாறு செய்தார். அப்போதும், வட்டிக்கு கடன் வாங்கி அடியாருக்கு அமுதளித்தான். கடன் கிடைக்காமல் போகவே, தான் பட்டினி கிடந்து வருந்தினான். மனமுடைந்த அவன் ஒரு நாள் மதுரைக் கோயிலையடைந்து, 'பெருமானே! அடியார்களுக்கு அமுதூட்ட என் நிலங்களில் விளைச்சல இல்லை. கடனும் கிடைக்கவில்லை. கடன் கொடுப்பாரைக் காட்டுவாய். இல்லாவிடில் உயிரை விட்டுவிடுவேன் என வேண்டினான்.

'விடனல்கு சூலப்படையாய்! கடன் வேறு
காணேன்!
கடனல்க வல்லார் தமைக் காட்டுதி!
காட்டாயேல்
மடனல்கும் இந்த உடம்பின் சுமை
மாற்றுவேன் என்று
உடனல்கு கற்புக்குரியளொடும் வேண்டு
மெல்லை.''

அப்போது இறைவன் ''வேளாளர் தலைவ! அஞ்சாதே, உன் வீட்டில் இன்று அரிசிக் கோட்டை ஒன்றை வைத்துள்ளோம். அது எடுக் எடுக்கக் குறையாது. அதிலிருந்து



வேண்டும்போதெல்லாம் எடுத்து அடியார்களுக்கு அமுது படைப்பாயாக! முடிவில் உனக்கு வீடளிப்போம்'' என அசரீரியாகப் பேசினார். வீடு திரும்பிய அடியார்க்கு நல்லான் உலவாக் கோட்டையைக் கண்டுமகிழ்ந்து அதனைப் பூசித்து அந்தணர், தென்புலத்தவர், தெய்வங்கள், உறவினர், விருந்தினர் முதலான யாவருக்கும் நன்கு விருந்தளித்து வாழ்ந்து இறைவனை யடைந்தான்.

''அப்பன் நீ! அம்மை நீ ஐயனும் நீ'' எனப் பாடிய தாண்டக வேந்தரான அப்பர் பெருமான் மாமன் என்ற சொல்லுக்கு ''அன்புடைய மாமனும் மாமியும் நீ'' என அடைமொழி கொடுத்தார். மாமனாக வந்து மதுரையில் திருவிளையாடல் புரிந்த வரலாற்றை மனத்தில் கொண்டார் போலும்.

மதுரையில் தனபதி என்றொரு வணிகன். அவன் மனைவி பெயர் சுசீலை, சகல செல்வங்களுடன் வாழ்ந்த அவர்களுக்குப் புத்திரப்பேறு இல்லாமல் வருந்தினர். தனபதி தனது சகோதரியின் மகனையே தனக்கு மகனாக எடுத்து வளர்த்தான். தனபதியின் மனைவிக்கும் சகோதரிக்கும் தீராச் சண்டை ஏற்பட்ட போது, தனபதியின் சகோதரி'' பிள்ளை இல்லாத பாவியான உனக்கு என்ன பெருமை? என் மகனால்தானே உனக்கு நல்லகதி கிடைக்கப் போகிறது'' எனக் கடுமையாகப் பேசிட்டாள். இது கேட்டு வருந்திய தனது மனைவியுடன் தனபதி அடுத்த பிறவியிலாவது தனக்கு மக்கட் பேறு வேண்டுமென்பதை எண்ணித் தவஞ் செய்ய காடு சென்றான்.

'பெருமிதம் உனக்கேன்! பிள்ளைப் பேறற்ற
பாவி! நீ என்
அருமை நன்மகனாலன்றோ இருமையும்
அடைவாயென்னப்
பெரிது நாணடைந்து மேலைக் காயினும்
பிள்ளைப் பேறு
தருதவம் புரிவனென்னா தனபதி தவமேற்
செல்வான்.'

தனது செல்வம் பூராவும் தன் மருமகனுக்கு உரிமையாக்கித் தனபதி தவம் செய்யச் சென்றபின், அவனது தாயாதிகள் மருமகனிடமிருந்து அவ்வளவு சொத்துக்களையும் பிடுங்கிக் கொண்டனர். இதனால் வருத்தமடைந்த தனபதியின் சகோதரி, தன் மகனுடன் கோயிலை அடைந்து ''திக்கற்றவர்கட்கெல்லாம் துணைவனே! நீயேகதி! என் மகனைத் தன் மகனாகக் கொண்டு தனது சொத்துக்களையெல்லாம் என் மகனுக்கு உரிமையாக்கிச் சென்றான் என் சகோதரன். தாயத்தார் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டனர். நான் ஒரு அனாதை. எனக்குள்ளவன் இந்த ஒரே மகன். அவனும் ஒன்றும் அறியாதவன். எனக்கு யாருமே கதியில்லை! எங்கும் நிறைந்த

நீயே என்னைக் காத்தருள வேண்டும்' எனத் தரையில் விழுந்து ஓலமிட்டு முறையிட்டான்.

''ஒருத்தி நான் ஒருத்திக்கிந்த ஒரு மகன்
இவனும் தேறும்
கருத்திலாச் சிறுவன் வேறு களைகணும்
காணேன் ஐய!
அருத்தி சால அறவோர் தேறும்
அருட்பெருங்கடலே! எங்கும்
இருத்தி நீ அறியாய் கொல்லோ என்று பார்
படிய வீழ்ந்தாள்''

சிறிது தளர்ந்து தூங்கியபோது அவள் கனவிலே சோமசுந்தரப் பெருமான் தோன்றி ''பொழுது விடிந்தபின் தாயத்தாரைஅழைத்து கொண்டு அரச சபைக்கு வா. நாமே நேரில் வந்து தக்கபடி வழக்கைத் தீர்த்துத் தருவோம்' எனக் கூறினார். பொழுது விடிந்ததும் ''ஒரு வீட்டிலும் அடுப்பை மூட்டாதீர்கள். ஊரை விட்டு நகரக் கூடாது. வஞ்சனை வழக்கால் வென்று போக விடமாட்டேன். அரசன் மீது ஆணை. தருமசபைக்கு வந்து எங்களுக்கு உரிய பொருளைத் தந்தால்தான் போகவிடுவேன்' என அழைத்தாள்.

''அட்டில் வாய் நெருப்பிடேல்! ஓர்
அடியிடேல்! அறத்தாறன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன்
பலரும் கேட்க
இட்டனன் அரசன் ஆணை! அறத்தவிசு ஏறி
ஆன்றோர்
ஒட்டியபடி கேட்டு எங்கள் உரிப்பொருள் தந்து
போமின்''

இவ்வாறு அழைத்த அவளைத் தாயாதிக்காரர் அடித்தனர். அவள் தரும சபையில் சென்று முறையிட, சபையினர் தாயதிக்காரர்களை அழைத்து விசாரித்தனர். அந்த நேரத்தில் ''இந்த நாட்டில் அரசனில்லையா? பெரியோர்கள் இல்லையா? அரசன் கொடுங்கோலனா? நூல்கள் கூறும் தெய்வம் இல்லையா? தருமம் எங்கேனும் ஒளிந்து கொண்டுவிட்டதா?'' எனக் கதறிக்கொண்டே தனபதி தோன்றினார். அதைக் கண்டு தாயாதிகள் வெட்கமும் பயமும் அடைந்தனர். தனது மருபகனைக் கண்ட தனபதி அவனை வாரி எடுத்து அணைத்து, கண்டோர் யாவரும் கண்ணீர் விட்டுக் கலங்குமாறு'' ''உன் மார்பிலே ஐம்படை என்னும் ஆபரணத்தைக் காணோம். கால்களில் சிலம்பைக் காணோம். தோளணியைக் காணோம். முகத்தில் சுட்டியைக் காணோம். காதுகளில் குண்டலங்களையும் காணோம். வெறும் உடம்புதானே இருக்கிறது. என் குழந்தையின் நகைகளையுமா எடுத்துக் கொண்டார்கள்'' என வாய்விட்டு அலறி அழுதார்

''ஐம்படை மார்பில்காணேன்; சிறு சிலம்பு
அடியில் காணேன்
மொய்ம்படை மதாணி காணேன்; முகத்தசை
சுட்டி காணேன்
மின்படுகுழைகள் காணேன்; வெற்றுடல்
கண்டேன் அப்பா
என்பெறும் என்று பிள்ளை பணிகளும்
கவர்ந்தார் மன்னோ''

## மெய்யான செல்வம்

**நல்ல காரியங்களுக்கு நாம் தரும் நன்கொடையே நாம் உண்மையில் சேர்த்த பெருஞ் சொத்தாகும்.**

தங்கையையும் மகனையும் கண்ணீரைத் துடைத்து ''நண்பர்களுக்கு வஞ்சனை புரிந்தோ, நம்பினோருக்கு வஞ்சகம் புரிந்தோ, லோபித்தனம் செய்தோ, அதிக வட்டி வாங்கியோ சேர்க்கப்பட்ட பொருள் இல்லை. நல்ல வழியில் சம்பாதிக்கப்பட்ட பொருளை வீணாக அழியவிடமாட்டேன்'' என்றனர்.

''நட்பிடை வஞ்சம் செய்தும் நம்பினோர்க்கு
ஊன் மாறாட்டத்து
உட்படக் கவர்ந்தும் ஏற்றோர்க்கு இம்மியும்
உதவராயும்
வட்டியன் மிதப்பக்கூறி வாங்கியும சிலர் போல்
ஈட்டப்
பட்டதோ? அறத்தா றீட்டும் நம் பொருள்
படுமோ என்னா''

(நீதியை அழகாகத் தெரிவிப்பதால் இப்பாடல் காட்டப் பெற்றுள்ளது) பிறகு கோயிலை நோக்கி வணங்கி 'மாணிக்கம் விற்ற மதுரை நாயகரே! எங்கள் வழக்கு நன்கு தீர்த்துத்தர வேணும்'' என முறையிட்டார். ''தரும சபையினரே! வழக்கை விசாரியுங்கள்.'' என வேண்டினார். தருமசபையினர் நன்கு விசாரித்து ''தாயாதிகள் குற்றவாளிகள்'' எனத் தீர்மானித்தனர். தாயாதிகள் திடீரென்று, ''இவர் தனபதியே அல்ல'' என ஒரேயடியாகப் பொய் கூறினர். குற்றவாளிகள் தாம் தப்புவதற்கு எப்படிப்பட்ட பொய் வேண்டுமானாலும் கூறுவர் என்பதைக் காண்க. இது கண்டு வியப்பும் சினமும் கொண்ட தனபதி வந்த தாயாதிகள் யாவரையும் அவர்களை பெயர், வீடு, காணி, தாய், தந்தை முதலான விவரங்களையும் கூறினார். தரும சபையினர் 'இவர் தனபதி தான்' என்று ஒப்புக் கொண்டனர். தோல்வியடைந்த தாயாதிகள் அரசனது தண்டனைக்குப் பயந்து ''வீட்டு வரை சென்று வருகிறேன்'', ''குளத்திற்குப் போய் வருகிறேன்'' என்று சாக்குக் கூறி ஒவ்வொருவராகச் சென்றனர். தரும சபையினர் 'சொத்துக்கள் யாவும தத்து எடுத்துக்கொண்டவனுக்கே உரியது' எனத் தீர்ப்புச் செய்ய, பரமனாக வந்த மகாதேவன் திடீரென மறைந்தனர். இறைவனது அளவிலாக் கருணையைக் கண்ட அரசனும், அவையினரும் சொத்துக்களை மீண்டும் அடைந்த தாயும் மகனும் மகிழ்ந்து ஆலவாய் அப்பனை வணங்கி வாழ்ந்தனர்.

**(தொடர்ந்து வரும்)**




# சங்காபிடேகமும்

சிவநேசன்

**முன்னுரை;**

எல்லாம் வல்ல இறைவன் எழுந்தருளி விளங்கும் திருக்கோயில்களில் நடைபெறும் அபிடேகங்கள் பலவற்றுள் 'சங்காபிடேகம்' என்பது ஒன்று. 108 அல்லது 1008 சங்குகளைக் கொண்டு, புனித தீர்த்தத்தை முகந்து இறைவனுக்குச் செய்யப்படும் அபிடேகமே, சங்காபிடேகம் எனப்படும். சங்கானது, இந்து சமயம், புராணம் ஆகியவற்றிற்குப் பெரிதும் தொடர்புடையது. இந்துக்களைப் போலவே, பௌத்தர்களும் சங்கினை மிக்க புனிதமான பொருளாகக் கருதிப் போற்றுகின்றனர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய அமராவதி, காஞ்சி முதலிய இடங்களில் உள்ள சிற்பங்களில் சங்கு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. காற்றினால் இசைக்கப் பெறும் துளைக்கருவிகளில் மிகப் பழங்காலத்திலிருந்து மனிதன் பழகி வரும் பொருள்களில், சங்கே மிக்க முதன்மையும் தொன்மையும் வாய்ந்ததென்று கருதப்படுகின்றது.

**சங்கின் புனிதத் தன்மை;**

கோயில் வழிபாடுகளிலும், வைதிகக் கிரியைகளிலும், இல்லறச் சடங்குகளிலும் மலர் தளிர் முதலிய தாவரப் பொருள்களேயன்றி உயிர்ப்பொருள்களின் உறுப்புப் பகுதிகளும் பயன்படுத்தப்படுகின்றன. தாவரங்களில் நெல் முதலிய தானியங்களும், மரத்தினால் அமைந்த வழிபாட்டுத் துணைக் கருவிப் பொருள்களும் பயன்படுகின்றன. இவ்வாறே உயிர்ப் பொருள்களின் வெவ்வேறு உறுப்புக் கூறுகளாகிய, தந்தம், கொம்பு, பல், தோல் எலும்பு, சங்கு, முத்து முதலியவைகளும் புனித பொருள்களாகக் கையாளப்படும். கோயில் வழிபாடுகளிலும், வைதிகக் கிரியைகளிலும், இல்லறச் சடங்குகளிலும் யானையின் தந்தம், மானின் கொம்பு, புலிப்பல், மான்தோல், ஆமை, ஓடு, மயிற்புலி, புலித்தோல் முதலியன பயன்படுத்தப் பெறுதல் காணலாம். அம்முறையில் சங்கும், மிக்க புனிதமுடைய பொருளாய்ப் பூசனைகளுக்குத் துணைபுரியும் நற்கருவியாகப் பெரியோர்களால் கொள்ளப் பெற்றுள்ளது. ஆலயங்களின் வாத்திய வகைகளுள் சங்கு வாத்தியமும் ஒன்று, கோயில் திருவிழாக்களில் சங்குகள் முழங்கும். சிறப்பாக கோயில்களுக்குச் சங்கு மிகவும் இன்றியமையாதது. 'செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கு இடுவான் போதந்தார்' என்னும் திருப்பாவைப் பகுதிக்கு உரிய உரையில், 'சங்கு என்றும் ஆராதன உபகரணத்துக்கு உபலட்சணம்' என வருதல் அறியற்பாலது.

**சங்கின் பயன்மிக்க நன்மை;**

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில் பலவகைகளில் தொடர்பு கொண்டு பயன்படும் பொருளாகச் சங்கு விளங்கி வருகின்றது; சங்குகளை வளையலாகவும், மோதிரமாகவும் செய்து பெண்கள் தம் கைகளிலும், விரல்களிலும் அணிந்து கொள்வதுண்டு.

'வேளாப் பார்ப்பான் வாள் அரம் துமித்த
வளை களைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன
தளைபிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை'

எனவரும் அகநானூற்றுப் பாடல் (24) வரிகள், மிகப் பழங்காலத்திலேயே தமிழக மகளிர் சங்கு வளையல்கள் அணியும் பண்புடையராக இருந்தமையினை இனிதுணர்த்தும். இன்றும் வடநாட்டில் சங்கு வளையல் சிறப்பாக மதித்து போற்றி அணியப்படுகின்றது. சங்கை அரைத்துத் தேய்த்து, நோய்களுக்கு மருந்தாகவும் வழங்குவர். கண்கட்டி முதலிய அழற்சிகளுக்குச் சங்கைத் தேய்த்துப் பூசிப் பற்றுப் போடலாம். மூலம் முதலிய நோய்களுக்கும் சங்கு மருந்தாகப் பயன்படும்.

குழந்தை பிறந்ததும், அதற்குப் பாலூட்டுவதற்குச் சிறிய சங்கு பயன்படுகின்றது. ஏனைய பிற எல்லாக் கருவிகளைக் காட்டிலும் பாலாடையாகப் பயன்படுவதற்கு சிறிய வெண்சங்கே மிக்க தூய்மையுடையதாய் ஏற்றதாக இருக்கின்றது. இது மட்டுமேயன்றி, மனிதனின் வாழ்க்கைச் சடங்குகள் பலவற்றில் சங்கு சிறப்பிடம் பெறுகின்றது. திருமண நிகழ்ச்சிகளிலும், திருவிழாக் காலங்களிலும் சங்கு முழங்குவது உண்டு. மனிதன் இறந்த பிறகு பச்சைப் பல்லக்கில் மயானம் செல்கின்ற போதும், சங்கு ஊதப் பெறுகின்றன. பின்னர் அவனுக்குச் செய்யப்படும் இறுதிச் சடங்குகளிலும், சங்கு இன்றியமையாத நிலை பெறுகின்றது. இவ்வாற்றால் மனிதனுடைய வாழ்வின் தொடக்க முதல் இறுதி வரையில் சங்கு தொடர்புடையதாக விளங்கி வருதல் காணலாம்.



**தமிழ் நூல்களில் சங்கு:**

சங்கின் சிறப்பைப் பற்றித் தமிழ் இலக்கியங்களில் பலவகைக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கோயில் வழிபாடுகளிலும், நலம் தீங்கு ஆகிய பலவகைச் சமுதாயச் சடங்குகளிலும் சங்கு ஊதப்பெறும். பண்டைக் காலத்தில் கோயில்களில் இராக் காலங்களில் அழைக்கைக்கு உறுப்பாகச் சாமங்கள்தோறும் சங்கு ஊதுதல் வழக்கம். 'புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ' என்பது திருப்பாவை. 'விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும் ஊரல்ல அடவி காடே' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். திருமாலின் ஐந்து படைகளுள் சங்கும் ஒன்றாகத் திகழ்கின்றது. 'வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை' என வரும் முல்லைப் பாட்டு இதனை குறிக்கின்றது. திருமால் அடியார்கள் பஞ்ச சம்ஸ்காரங்கள் எனப்படுபவற்றுள் ஒன்றாகச் சங்கின் இலச்சினையைத் தோள் முதலிய இடங்களில் பொறித்துக் கொள்ளுவார்கள்.

சங்குகள் முறையே இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம் என நான்கு வகைப்படும். இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி; இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி, வலம்புரி அயிரம் சூழ்ந்தது சலஞ்சலம். சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்சசன்னியம் என நிகண்டு நூல்கள் கூறும். சங்கு வெண்ணிறமுடையது ஆதலின் அது தூய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். 'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே, சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்னும் பாடல், சங்கின் வெண்மையையும் தூய்மையையும் புகழ்ந்து குறிப்பிடுதல் காணலாம்.

குடிப்பிறப்பின் தூய்மைக்குக் கவிஞர்கள் சங்கினையே உவமையாகப் பாடுவர். 'சங்குடை ந்தனைய வெண்தாமரை மலர்த்தடங்கள் போலும் நம்குடி' என வரும் சீவகச் சிந்தாமணிச் செய்யுட் பகுதிக்கு, 'சங்கு சுட்டாலும் நிறம் கெடாதது போலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடி எனினுமாம்; நத்தம் போற்கேடும் என்ப' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரை விளக்கம் இங்கு அறிந்து இன்புறத்தக்கது.

ஆண்மக்களின் கையில் சங்க ரேகை இருப்பது சிறப்புடையது. 'வலம்புரி பொறித்த வண்கை மதவலி' என வரும் சிந்தாமணிச் செய்யுட் பகுதி இதனை வலியுறுத்தும். பெண்மக்கள் வலம்புரிச் சங்கு வடிவமாகச் செய்த ஓர் அணிகலனைத் தலையில் அணிந்து மகிழும் செய்தியை 'தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்து' என வரும் திருமுருகாற்றுப் படை வரி உணர்த்துகின்றது.

சங்கு முழங்குவது நல்ல நிமித்தத்திற்கு அறிகுறி. அரசன் போருக்குப் புறப்படும் போதும், வெற்றி பெற்றுத் திரும்பும்போதும் சங்கு முழங்குவது மரபு ''கைவிட மாட்டான் என்று ஊது ஊது சங்கே, கனக சபையான் என்று ஊது ஊது சங்கே'' என இராமலிங்க அடிகள் பாடுதல் காணலாம்.

இந்திய நாட்டின் டழம்பெரும் இதிகாச பாகிய மகாபாரதத்தில், பஞ்ச பாண்டவர் களும் கண்ணபிரானும், தத்தமக்கென ஒரு சங்கு வைத்துக் கொண்டிருந்தனர். தரும புத்திரரின் சங்கு அனந்த விஜயம், பீமசேன னின் சங்கு பவுண்டரம், அர்ச்சுனனின் சங்கு தேவதத்தம், நகுலனின் சங்கு சுகோஷம், சகாதேவனின் சங்கு புஷ்பகம், கண்ணபிரானின் சங்கு பாஞ்ச சன்னியம் எனப் பெயர் பெற்றி ருந்தன.

**திருக்குற்றாலம்:**

திருக்குற்றாலம் என்னும் தேவாரப்பாடல் பெற்ற புகழ்மிக்க சிறந்த தலத்தில், திருக் குற்றாலநாதர் கோயிலின் வடிவம் சங்குபோல அமைந்துள்ளது என்றும், அதனைச் சுற்றி யுள்ள வீதிகள் சங்கின் பற்பல முறுக்குகள் போல வளைந்து வளைந்து அழகுற விளங்கு கின்றன என்றும் புகழ்ந்தும் போற்றித் திருக் குற்றாலத் தலபுராண ஆசிரியர் பாடி மகிழ் கின்றார்.

**திருக்கழுக்குன்றம்:**

தொண்டை நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்றாக விளங்குவது திருக்கழுக்குன்றம், அங்கே உள்ள பெரிய திருக்குளம் 'சங்குதீர்த் தம்' என வழங்குகின்றது. அத்தீர்த்தத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, சங்கு ஒன்று தோன்றுகின்றது. அங்ஙனம் தோன்றும் நாளை ஒரு புனித நாளாகக் கருதி, அத்தலத் தில் விழாவாக கொண்டாடப்படுகிறது. அங்ங னம் அவ்வப்போது தோன்றிய சங்குகள் பல, அக்கோயிலில் தொகுத்து வைக்கப் பெற்றுள் ளன. அச்சங்குகளைக்கொண்டு சங்காபிடேகம் நிகழ்த்தப் பெறுகின்றது.

**திருக்கடவூர்:**

சிவாலயங்களில் சங்காபிடேகம் எப் போது முதல் தொடங்கிச் செய்யப் பெற்று வருகின்றது என்பதனை அறியத் தெளிவான சான்றுகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. சிவாலயங்கள் பலவற்றில் சங்காபிடேகம் நிகழ் கின்றதாயினும், தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் அபிராமி அம்மை உடனுறை அமுதகடேசுவரர் கோயிலிலேயே சங்காபிடேகமானது மிகத் தொன்னெடுங் காலமுதல் விழாவாக நடைபெற்று வருகிறது என்று தெரிகின்றது. முசுகுந்தன் என்னும் சோழவேந்தன் காலத்திலிருந்து அவனால் சங்காபிடேகம் தொடங்கி நடைபெற்று வரு கின்றது என்று வழிவழி வரும் மரபுச் செய்தி கூறுகின்றது.

முசுகுந்தன் என்னும் சோழவேந்தன் ஒரு சமயம் திருக்கடவூர் வழிபாட்டிற்குச் சென் றான். அப்போது அவன் திருக்கடவூர் மயா னம் என்னும் தலத்துத் தீர்த்தத்தில் அஃது இறைவன் ஒருவர்க்கு மட்டுமே உரிய தீர்த்தம் எனபதனை அறியாமல் நீராடினான். அதன் விளைவாக அவனது உடலை ஒரு கொடிய நோய் பற்றிக் கொண்டு துன்புறுத்தியது. அத னால் வருந்திய அவன், அதன் காரணமறிந்து, அதற்குக் கழுவாயாக ஆயிரத்தெட்டுச் சங்குகள் கொண்டு, சிறந்த மருந்துப் பொருள்களிட்ட புனித நீரால், இறைவனுக்கு அபிடேகம் செய்வித்து, தனக்கு ஏற்பட்ட பிணி நீங்கி நலம் பெற்றான். அது முதல், ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்துச் சோம வாரம் ஒவ்வொன்றிலும் திருக்கடவூரில் சங்கா பிடேகம் நடைபெற்று வருகின்றது என்பது வரலாறு.

**சங்காபிடேகப் பொருள்கள்:**

திருக்கடவூர்க் கோயிலில் நிகழ்த்தப் பெறும் சங்கபிடேகத் தீர்த்தத்தில், எட்டுவகை மலர்கள், எட்டுவகைப் பத்திரங்கள், ஏழுவகை மருந்துப் பொருள்கள், ஐந்து வகை உலோகங்கள், ஒன்பது மணிகள், பப்பத்துக் காய்கனிகள், ஏழுவகை நறுமணப் பொருள்கள், ஒன்பது வகைப் பாடாணங்கள், பூச்சுக்கள், ஏழு நதித் தீர்த்தங்கள், தானியங்கள், மூலங்கள், மலைபடுபொருள்கள், கடல்படு பொருள்கள் முதலியன ஆகம முறைப்படி தொகுத்துக் கலக்கப் பெறும். அப் புனித தீர்த் தத்தை ஆயிரத்தெட்டுச் சங்குகளால் முறையே முகந்து, மந்திரங்கள் ஓதி, இறைவனுக்குத் திருமுழுக்காட்டுவது அன்பர்களுக்கு ஆளப்ப ரும் இன்பக் காட்சியாக விளங்கும்.

**சங்கின் ஓங்கார அமைப்பு:**

இங்ஙனமெல்லாம் சங்கு ஒரு சிறந்த புனிதப் பொருளாக மதித்துப் போற்றப்படுவ தற்குக் காரணம், அதன் அமைப்பும் இயல்புமே யாகும். சங்கின் அமைப்பானது உற்றுநோக்கி ஆராயுங்கால், பிரணவம் என்னும் ஓங்காரத் தினை ஒட்டித் திகழ்தல் காணலாம்.

''ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம் எனும் ஓங்காரத் துள்ளே உருவரும்
ஓம்எனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண் முத்தி சித்தியே''

— திருமூலர்.

என்றெல்லாம், சான்றோர்களால் பலவாறு புகழ்ந்து போற்றப்படும் ஓங்காரத்திற்கும் இவ் வுலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக அமைகின்றது என, நமது வேதாக மங்கள் விளக்கி உரைக்கின்றன. ஓசையானது, தான் இயங்கும் முறையாலும் இயக்கப்படும் முறையாலும், அணுக்களைக் கூட்டுதலும், கூட்டி நிலைப்பித்தலும், கூட்டியவற்றைப் பிரித்தலும் செய்ய வல்லதாதலை, இஞ்ஞான்று இயற்கைப் பொருள் நூலார்

ஆராய்ந்து விளக்கிக் காட்டுதலின், இவ் ஓங்கார ஒலி உலகங்களையும் நம் உடம்புகளையும் தோற்றுவித்தும் நிலைப்பித்தும் அழிப்பித்தும் இயக்கி வருகின்றன என நமது ஞானிகள் நவின்றிருக்கின்றனர்.

**உடலும் ஓங்காரமும்:**

அண்டம் பிண்டம் என்னும் இரண்டன் இயல்பும் ஒருதன்மையனவே என்பது, ஞானிகள் கண்ட உண்மை, அண்டங்களையெல்லாம் இயக்குவிக்கும் ஓங்கார ஒலியே, பிண்டம் எனப்படும் நமது உடலையும் இயக்கி வருகின்றது. நமது உடம்பின் அகத்துள்ள சிறந்த உறுப்புகள் அனைத்தும், ஓங்கார வடிவினவாகவே அமைந்துள்ளன. நமது உடம்பின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் மிகமிக இன்றியமையாத கருவியான நெஞ்சப்பையின் வடிவமானது தாமரை முகை அல்லது சங்கு போன்று, ஓங்கார வடிவமாய் அமைந்திருக்கின்றது. நெஞ்சப்பை மட்டுமேயன்றி, நமது அறிவு விளக்கத்திற்கு நிலைக்களனாய் விளங்கும் மூளையும், நாம் உண்ட உணவை ஏற்று உடம்பிற்கு வேண்டும் சாரத்தை அதனின்று பிரித்துத்தரும் இரப்பையும், இரைப்பையினின்று பிரித்துக் கழிக்கப் படுவனவற்றை வெளிப்படுத்தும் மலக்குடரும், சிறுநீர்ப் பையும் ஓங்கார வடிவமாகவே அமைந்துள்ளன. கருப்பையினுள் வளரும் கருவும் முதுகை நிலையில் உடலில் ஏற்படும் கூனும், ஓங்கார வடிவமாகவே உள்ளன. ஒலிகளைக் கேட்பதற்குரிய நமது காதுகளும் ஓங்கார வடிவிலேயே அமைந்திருக்கின்றன. இத்தகைய சிறப்பும் ஆற்றலும் மிக்க ஓங்காரத்தினை வடிவால் ஒத்திருக்கும் காரணம்பற்றியே சங்கு மிக்க புனிதமுடைய பொருளாகச் சான்றோர்களால் கொள்ளப் பெற்றுள்ளது.

**சங்கின் மற்றொரு தன்மை:**

இனி வேறு ஒரு குறிப்பும், இங்கு நாம் கருதுதல் கூடும். சங்கின் அமைப்பிற்கும் நமது மனித உடலின் அமைப்பிற்கும், ஒரு பெரிய வேறுபாடு உள்ளது நமது உடலில் ஊன் என்னும் தசை மேலேயும், என்பு உள்ளேயும் இருக்கக் காண்கின்றோம். ஆனால் சங்கினது அமைப்பில், வன்பகுதியாகிய என்புமேலே நிற்க, அதற்குள்ளேயே மென்பகுதியாகிய தசை அமைந்திருக்கின்றது. உள்ளே உள்ள ஊன் என்னும் தசை கழிந்த அல்லது கழிக்கப் பெற்ற பிறகே, சங்கு தூய்மையுடையதாக மதித்துப் போற்றப்படுகின்றது.

ஊன் என்னும் தசை கழிந்த சங்கு, மலமாசுகள் அகன்ற நமது மனத்திற்கு அறிகுறியாக அமைகின்றது. தசை கழிந்த சங்கு புனித பொருளாய்ப் பூசனைக் கருவியாதற்குத் தகுதியுடையதாதல் போல, மலமாசுகள் கழிந்த நமது மனமும், தூய்மையும் புனிதமும் அடைந்து இறைவன் எழுந்தருளத்தக்க இனிய கோயிலாக மாறுகின்றது. மனத்தில் உள்ள குற்றங்கள் நீங்கினால், இறைவனை நாம் நமது மனம் ஆகிய கோயிலின் உள்ளேயே கண்டு இன்புறலாம் என்னும் கருத்தமைய,

# எங்கும் உளன் இறைவன்!



*இறைவன் இல்லாத இடமில்லை. எல்லாம் அவனே. அதனாலேயே அவனைப் பார்க்க முடியவில்லை.*

*இரணிய கசிபு எங்கும் தேடிக் கடவுளே இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான். பிரகலாதனோ தொட்ட இடமெல்லாம் இறைவனைக் காணலாம் என்று கூறி அவன் தூணிலும் இருப்பதை நிரூபித்தான்.*

*இறைவன் எளியன். முறை தெரியாமல் முயன்றால் அவன் அரியவன்.*

—ஸ்ரீ சத்ய சாயி பாபா.

''உள்ளத் திருக்கு ஒயில், காணலாம் ஈசனைநம் உள்ளத் திருக்கோயில் உள்'

எனக் குமரகுருபர சுவாமிகள் கூறியருளிய அரிய பெரிய கருத்தினை, ஒரு வகையில்சங்கின் அமைப்பும் இயல்பும், நமக்குத் தெளிவுற அறிவுறுத்தி நிற்கின்றன எனலாம்.

**முடிவுரை:**

இத்தகைய பல சிறப்புக்களையுடைய சங்குகள் கொண்டு ஆகமங்கள் கூறும் முறைப்படி, கோயில்களில் இறைவனுக்கு ஆற்றப் பெறும் சங்காபிடேக விழாவினை, அன்பர்கள் அனைவரும் கண்டு தொழுது களிப்புற்று, மலமாசுகள் நீங்கிய மனத்தினராய் வைகிச் சகல செல்வ யோகம் மிசுக பெருவாழ்வுபெற்று மகிழ்ந்து, வையத்து, வாழ்வாங்கு வாழ்ந்துய்ந்து, நலமுறுவார்களாக.

# மகேசுவர பூஜை

பேராசிரியை திருமதி சுமதி குமாரசுவாமி
மருத்துவக் கல்வித் துணை இயக்குநர், (செவிலியல்)
எழிலகம், சென்னை - 600 005.

சிவனடியார்களுக்கு உணவிடும் புண்ணிய செயல் மகேசுவரர் பூசையாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரும் சிவகதிக்கு வித்தாம் திருமந்திர நூலை அருளிய அருளாளருமான திருமூலர் தம் திருமந்திரத்துள் மகேசுவர பூசையின் சிறப்பை எடுத்து ஓதுகின்றார்.

''படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே
(திருமநதிரம் 1857)

சித்திரம் போன்று மாடங்களை உடைய கோயிலிலுள்ள இறைவனுக்கு நைவேத்தியம் செய்தால், நடமாடும் கோயிலாகத் திகழும் சிவனடியாரை அது வந்து சேராது. ஆனால் நடமாடும் கோயிலாக விளங்கும் சிவனடியார்க்கு மகேசுவர பூசையாகும் உணவு அளித்தால், அவ்வுணவு மாடக் கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு நைவேத்தியம் படைத்தது போலாகும் என்று விளக்கியுள்ளார் திருமூலர்.

இன்னும் திருமூலரே மகேசுவரர் பூசையை வற்புறுத்தியுள்ள மற்றொரு பாடலைக் காண்போம்.

''அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயம் தானே''
(திருமந்திரம் 1860)

ஆயிரம் நகரத்தை அந்தணருக்கு அளிப்பதை விடவும், ஆயிரம் திருக்கோயில்களைக் கட்டி முடிப்பதை விடவும், ஞானி என்று திகழும் சிவனடியார் ஒருவருக்கு ஒருபகல் உணவு அளிக்கும் அந்த மகேசுவர பூசைக்கு அவையெல்லாம் ஈடாகாது என்பதே இப்பாடலின் விளக்கமாகும்.

இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து சிறந்திருந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் உணவறத்தைப் போற்றியுள்ள சிறப்பை

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி'' (226)

''பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது'' ... (227)

ஆகிய குறள்களால் அறிகிறோம்.

ஏதும் இல்லா ஏழையின் கொடிய பசி நோயைப் போக்க வேண்டும்; பொருள் பெற்றவன் தன்பொருளைச் சேமித்து வைக்கும் இடம் அதுவே ஆகும். பசி என்கிற தீய நோயானது, பலரோடும் பகுத்து உண்ணுகிற பழக்கம் உடைய கொடையாளனைத் தீண்டாது; இவ்வாறு பசிப்பிணியைப் பற்றியும் அத்தீயைத்தணிக்கும் தன்மை மற்றும் பெருமை பற்றியும் திருவள்ளுவர் அழகாக விளக்குவதை பேற்காணும் குறள்களில் காணுகின்றோம்.

''குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்வி பெருமபுணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி''

என்று மணிமேகலை காவியத்தில் பசிப்பிணியின் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் சீத்தலைச் சாத்தனார்.

''மானங் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயர்ச்சி தாளாண்மை-தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்தி டப்பறந்து போம்''

என்கிறார் அருந்தமிழ் மூதாட்டி ஔவையார்.

இத்தகைய கொடியதான பசிப்பிணியைப் போக்க எவன் ஒருவன் விழைகின்றானோ அவனே மகேசுவர பூசை செய்த பலனைப் பெறுகிறான்.

கொடை அனைத்திலும் தலையான கொடை, ஈகை அனைத்திலும் முதன்மையான ஈகை, தானம் அனைத்திலும் தலைசிறந்த தானம் அன்னதானமே ஆகும். அதிலும் குறிப்

மறிந்து நடமாடும் தெய்வங்களுக்குச செய்யும் தானமே ஒப்பற்ற தானம்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், நாம் போற்றும் ஏழாம் திருமுறையை அருளியவருமான சுந்தரமூர்த்தி சுவாமிகள் மகேசுவர பூசையால் சிறப்புற்று விளங்கிய இளையான்குடி மாற நாயனாரை மிகவும் போற்றியுள்ளார்.

''இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்' என்பது அவர்தம் திருத்தொண்டத் தொகை. இளையான்குடி என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர். மாறர் என்னும் பெயரினர். இவர் அடியார்கட்கு மகேசுவர பூசை படைத்து சிறப்புற்று விளங்கினார். வறுமை உற்ற நிலையிலும் சிவனடியார்க்கு எந்த வேளையும் இல்லை என்னாமல் உணவு அருத்தினார். ஒருநாள் நட்ட நடுநிசியில் நல்ல மழையில் சிவபெருமான் வயோதிக அடியாராய் இவர்தம் வீட்டிற்கு வர, அப்போது வீட்டில் உணவு ஒன்றும் இல்லாத நிலையில் தம் நிலத்தில் அற்றைப் பகலில் விதைத்திருந்த விதைநெல்லையும் வாரிக் கொணர்ந்து பக்குவப்படுத்தி உணவு ஊட்டிய இவர்தம் சிறப்பை என்னென்று போற்றுவது?

வறிய நிலையிலும் அடியார்க்கு அமுது படைத்த அவர்தம் மகேசுவர பூசையைப் போற்றி இறைவன் அருள்செய்த வரலாற்றை விரிவுபடப் பாடியுள்ளார் சேக்கிழார்.

''அன்பனே அன்பர் பூசை அளித்தநீ
அணங்கினோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன்
தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல்
கேட்ப
இன்பம் ஆர்ந்திருக்க வென்றே அருள்செய்தான்
எவர்க்கும் மிக்கான்''

என்ற சேக்கிழாரின் தெய்வத் திருப்பாடலை இன்றும் மகேசுவர பூசையின்போது அடியார்கள் மகிழ்ந்து பாடிப் போற்றுவதைக் காண்கிறோம்.

அடியவர்களுக்கு அளித்து அவர்கள் உண்டபின் எஞ்சியிருக்கும் உணவை உண்டால் முக்தி நிச்சயம் என்றும் மொழிகிறார் திருமூலர்.

'வித்த மாகிய வேடத்தோர் உண்ட ஊண்
அத்தன் அயன்மால் அருநகிய வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தி யாமென்று நடமூலன் மொழிந்ததே''

மகேசுவர பூசையின் மகிமையை உலகுக்கு எடுத்துக் காட்ட இறைவன் மதுரையம்பதியில் அடியார்க்கு நல்லான் என்ற அடியானுக்கு வறுமையை ஏற்படுத்திப் பிறகு அள்ள அள்ளக் குறையாத அரிசி உலவாக் கோட்டையை அருளியதாக திருவிளையாடற் புராணத்தில் வரும் வரலாறும் ஈண்டு நினைந்து மகிழ்தற்குரியது.




## எம்மதமும் என்மதம் !

நாம் வேற்றுமையை அகற்றி ஒற்றுமையைக் கடைப்பிடிப்போமாக! எம்மதத்தையும் புறக்கணிக்காது ஏற்றுக்கொள்வதே நம் எண்ணமாக இருக்கவேண்டும். அவற்றைச் சகித்துக்கொள்வோம் என்பதன்று. ஏனெனில் அச்சகிப்பு பிற மதங்கள் தாழ்ந்தவை என்ற எண்ணத்தால் ஏற்படுகிறது. நீங்கள் அவ்விதம் நினைத்தால் அது கடவுள்பால் செய்யும் அபசாரம் அன்றோ! நான் உலகில் தோன்றிய மதங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறேன். அவை எல்லாவற்றையும் நான் பின்பற்றுகிறேன்.

—சுவாமி விவேகானந்தர்.

''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று'' என்பது பழமொழி. தெய்வத்திற்கு நிகரான சிவனடியார்களை மகேசுவர பூசையால் பேணுவதைப் போல, தெய்வத்திற்கு நிகரான குழந்தைகளை சத்துணவு தந்து பேணும் நம் அரசின் திட்டமும் நோக்கமும் மிகமிக உயர்வானதேயாகும்.



# பாவத்தில் கொடிய பாவம் மது

### மாண்புமிகு தமிழக முதல்வர்

## டாக்டர் புரட்சித்தலைவி:

மதுப் பழக்கம் ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து அவனை மிருகமாக மாற்றி விடுகிறது என்றார் மகாத்மா காந்தி.

மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது என்றார் தந்தைப் பெரியார்.

மதியை மயக்கும் குடிப்பழக்கத்தை சமுதாயத்திலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பதுதான் பெரியோர்கள் அனைவரின் ஒருமித்த கருத்து.

குடியின் கொடுமை ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி அனைவரையும் அழிக்கும் அரக்கத்தனம் கொண்டது. குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள் முதலில தம்மை அழித்துக் கொள்கிறார்கள்.

அடுத்து அவர்களைச் சார்ந்துள்ளவர்களை நிலையான பாதிப்பிற்கு ஆட்படுத்துகிறார்கள்.

சாதாரண மனிதனை வறுமையில் வாட்டி, ஏழ்மையில் ஆழ்த்தி, அவனை வாழ்க்கையில் முன்னேறவிடாமல் தடுத்து வருகின்ற மதுவிற்கு சாவுமணி அடிப்பது நமது சமுதாயத்தின் தலையாய கடமை.


வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர அரசு எத்தனை உதவிகள் செய்தாலும் அவற்றின் முழுப்பயனும் அவர்களுக்குப் போய்ச் சேராமல் அவர்களைத் தொடர்ந்து வறுமையில் ஆழ்த்தும் வலிமை படைத்த மது அரக்கனை ஒழிக்கவும், அவர்கள் மதுப்பழக்கத்தை விட்டொழிக்கவும் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதே சாயான மார்க்கமாகும்.

—மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரையிலிருந்து



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002





மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திருமிகு கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் இலட்ச தீப விழா மலரை வெளியிட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திருமிகு எஸ். கண்ணப்பன் அவர்கள் மலரின் முதற்படியைப் பெற்றுக் கொள்கிறார்கள். செங்கை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு வரதராசன் அவர்கள் உடன் உள்ளார்கள்.

மாண்புமிகு நீதிபதி திரு கே. வேங்கடசாமி அவர்களும், இலட்ச தீப விழாக் குழுத் தலைவர் ஏ.என். சீனிவாசராவ் ஆகியோர் இலட்ச தீப விழாவில் திருவிளக்குகளை ஏற்றுகின்றனர்.







மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில் திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் நடைபெ